# சிந்தனையமுது

பொருளாதார நிபுணர்,

டாக்டர். பா. நடராஜன், எம். ஏ. டி. லிட்.

UNIVERSITY LIBRARY
31 MAY 1957
MADRAS

விற்பனை உரிமை

பாரி நிலையம்.

59, பிராட்வே, : : சென்னை-1.

முதற்பதிப்பு 1955 ஜூன்.

விலை ரூபாய் ஒன்று

783
O31:6
J5

பவானி அச்சகம்,
32, ஹைரோடு, எழும்பூர், சென்னை-8.

# பதிப்புரை

டாக்டர் பா. நடராஜன் அவர்கள் பொற்றாமரைப் பதிப்பகத்தில் ஒளிவிளக்கை முதலில் ஏற்றிவைத்தார்கள். அவரது அரிய நூலாகிய 'ஒளிவிளக்குகள்' எனும் நூலைத் தமிழர் கரங்கள் பேராவலுடன் வரவேற்றன. இன்னும் வரவேற்கின்றன. இது எங்களுக்கு என்றும் புலரா மகிழ்ச்சி.

டாக்டர் அவர்களது அறிவுத் தடாகத்திலே பூத்த சில கட்டுரை மலர்களைத் தொகுத்து இப்போது தமிழர் களுக்குச் சிந்தனையமுதாகத் தருகின்றோம். அவர்களுக்கு இது, பார்த்தாலும், படித்தாலும் படிக்கப் பக்கம் நின்று கேட்டாலும் தித்திப்பதாய் இருக்கும் என்பதில் ஐயமில்லை.

பொற்றாமரைப் பதிப்பகத்தார்.

# உள்ளுறை

1. நீதி
2. இறப்பும் புதைப்பும்
3. ஆவிக்காட்சி
4. திபெத்
5. வசந்தன் வருகை
6. ஞானமும் விஞ்ஞானமும்
7. பிரார்த்தனை

UNIVERSITY EXTENSION LI
MADURAI

# நீதி

கிரேக்க தேசத்தில் இரண்டாயிரத்தி ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன் சோலன் என்ற ஒரு பேரறிஞன் தோன்றி, கிரேக்க மக்களுக்குச் சட்டவரம்பு செய்து கொடுத்தான். கிரேக்கச் சோலனுக்கும் மனுநீதி கண்ட தமிழ்ச்சோழனுக்கும் என்ன தொடர்பு என்று சொல்லாராய்ச்சியாளர் கண்டறிய முற்பட வேண்டாம். அவன் வகுத்த சட்டங்களைப் படித்துவிட்டு, அனுபவம் வாய்ந்த ஒரு முதியோன் சொல்வான்: "அறிவாளிகள் சட்டம் செய்கிறார்கள். அறிவிலிகள் அமுல் செய்கிறார்கள்," என்று. உலகில் இன்று மூன்று கோடிச் சட்டங்களுக்கு மேல் சட்டப் புத்தகத்தில் ஏறி வரிசை பெற்று நிற்கின்றன என்று ஒரு கணக்கைப் பார்த்த ஞாபகமிருக்கிறது. 250 கோடி மக்கள் தொகைக்கு மூன்று கோடி மிகுதியாகுமா? தலைக்குச் சராசரி ஒன்றாக 250 கோடிச் சட்டமாவது வேண்டாமா? இது வேக உற்பத்தியைக் கொண்ட எந்திர உற்பத்திக் காலம். சட்ட உற்பத்தியும் அதற்கு ஏற்ற விரைவில் பெருகி வருகின்றது போலும். அதிகச் சட்டம் அதிக நாகரீகத்தின் அறிகுறி என்று கருதுகின்றனர். சென்ற ஐம்பது, எழுபது ஆண்டுகளாக விஞ்ஞான வளர்ச்சியால் மனித வாழ்வு சிக்கல் மிகுந்து கொண்டே போகின்றது. சிக்கல் மிகுந்து கொண்டு போகும் வாழ்வின் ஒவ்வொரு துறையிலும் அர

சாங்கம் புகுந்து நீதியையும் நெறியையும் வகுப்பது தன் கடமையெனக் கொண்டிருக்கின்றது. இன்னும், பொருளாதாரத் துறையில் எத்தனையோ கட்டுப்பாடுகளைப் பெருக்கியே பராமரிப்பு ஆட்சி என்னும் நன்னல ஆட்சியை நாளடைவில் நிலை நாட்ட முடியுமென்று கருதுகின்றது. இதனால் சட்டம் வெகுவேகமாக வளர்ந்து கொண்டு போகின்றது.

அதிகச் சட்டம், அதிக நாகரிகம், சட்டம் நாகரிகத்தின் அறிகுறி. பழைய சமுதாயங்களில் சட்டங்கள் கிடையா, அல்லது மிகச் சில எனலாம். அதாவது அரசாங்கச் சட்டம் என்பவை கிடையா. ஆனால் அங்கு அரசாங்கச்சட்டத்திலும் வலியதான சமூக வழக்கச் சட்டங்களிருந்தன. மனிதர் யாரும் சரி நிகர் சமானமென்றிருந்த வரை, உடமையாவும் பொதுவென்றிருந்தது வரை, அரச சட்டங்களே இல்லாது வாழ்ந்தனர். பழங்கால மனிதரோடு வாழ்ந்து அவர்கள் வரலாற்றைக் குறித்துப்போன ஸர். ஆல்பிரட் வாலஸ், ஹெர்மன் மெல்வில் போன்ற எத்தனையோ ஆசிரியர்கள், சட்டமே இல்லாது, எவ்விதக்குற்றமுமே செய்யாது, தூய்மையான, நெறியான வாழ்வை நடத்தி வந்த "அநாகரிக" சமுதாயங்களைப் பற்றி விரிவாக விதந்து பேசியிருக்கிறார்கள். இந்த 'அநாகரிகர்கள்' நாகரிகர்களா, அல்லது மூன்று கோடிச்சட்டத்தை முதுகில் தாங்கிக்கொண்டு, தவறினாலும் சட்டத்தின்

தலையில், இடறினாலும் சட்டத்தின் முதுகில் என்ற தத்தளித்த நிலையிலிருக்கும் நாம் நாகரிகர்களா?

சட்டம் நாகரிகத்தின் அறிகுறியா, அளவு கோலா? அலூசியன் தீவுகளை ரஷ்யர்கள் கைப் பற்றியதும் தங்கள் முறையில் நீதி மன்றங்களை எங்கும் நிறுவினர். ஐம்பது ஆண்டுகளில் மன்றங் களுக்கு வேலையே இல்லாது போயிற்று. தீவ மக்கள் "அநாகரிக" ரென்று அன்று கருதப் பட்டவர். ஆனால் அவர்களுக்குச் சட்டத்தின் உதவி தேவையில்லாதிருந்தது. எதற்குச் சட்டம்? எங்குப் பொய்யும், வழுவும் தோன்றுகின்றனவோ அங்குத் தானே சட்டம் வேண்டும். எங்கு மிகுந்த பொய்யும் மிகுந்த வழுவும் இருக்கின்றனவோ, அங்கு மிகுந்த சட்டங்களும் வேண்டும். இந்தப் பொய்யும் வழுவும் முதலில் தோன்றியது ஆண் பெண் உறவிலேயே என்பது தொல்காப்பியர் கருத்து. தூய்மையான இயற்கையான களவொழுக்கத்தில் திளைத்துப்பின், அலரெழ, கற்பு நெறியில் உறுதி கொண்ட தலை வனும் தலைவியும், நெறி பிறழலாயினர். நீயார் நானார், உன்னைக் கண்டதார், என்னைக் கண்டதார், என்ற முறையில் பொய்யும் வழுவும் மெல்ல மெல்லப் புகுந்தன. அப்பொழுதுதான் சட்டமும் முதல் முதல் தலையைக் காட்டியது. ஐயர் புகுந்தார் சமயச் சட்டத்தோடு. சமயச் சட்டம் சமூகச் சட்டமாகி அரசு வர அரசாங்கச் சட்டமாய் விரிந்தது.

பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்
ஐயர் யாத்தனர் கரணமென்ப

என்பது இன்றைய ஆராய்ச்சி முடிபுக்கொத்த தொல்காப்பியச் சூத்திரமாகும்.

ஆதியிலே மக்கள் தொகுதியினர் கண்ட வழக்குச் சட்டங்கள் மிகக் கொடியனவாயிருந்தன. வஞ்சம் தீர்ப்பது, பழிவாங்குவது என்ற அடிப்படைகளிலேயே அவை எழலாயின. கண்ணுக்குக் கண், பல்லுக்குப்பல், ஊனுக்கு ஊன் என்ற நீதி பழங்குடிமக்கள் வழக்குகளிலெல்லாம் பெருவழக்காக வலுப்பெற்றிருந்தது. மோசே வகுத்த யூதர்கள் சட்டநெறியிலும், அம்முராபி மன்னன் வகுத்த பாபிலோனியா சட்டநெறியிலும் பழிக்குப்பழி வாங்குவது என்பதே அடிப்படையான கருத்தாயிருந்தது. உரோமானியச் சட்டத்திலும் லெக்ஸ் டாலியானிஸ் என்ற பெயரோடு பெருவழக்காய், மேலை நாடு எங்கணும் பரவி, இன்றையக் காலம் வரை விதிக்கும் தண்டனைகளுக்கெல்லாம் ஊற்றாகியது. பழந்தமிழரிடத்தும் பெருவழக்காயிருந்தது.

திருத்தொண்டர் புராணத்திலே, திருமலைச் சிறப்பு முடிந்ததும், முதன்முதலாகச் சேக்கிழார் சொல்லும் வரலாறு மனுநீதிகண்ட சோழனைப் பற்றியதாகும். எனவே கால அளவில் இவன் வரலாறே மிகப் பழமையானதென்று கொள்வதில் தவறெதுவுமில்லை. இவ்வரலாற்றிற் கூறப்படும் நீதிமுறைமைத் தமிழர்குடியில் மிகப்பழங்காலத்து வழக்காற்றி லிருந்ததொன்று என்று கொள்ளலாம். அப்படிக் கொள்வதானல் ஊனுக்கு ஊன்,

உயிருக்கு உயிர் என்ற முறையிலேயே அன்றையச் சட்டமும் இருந்துள்ளது. அமைச்சர்கள் பிற் காலத்து வந்த மறை அந்தணர்கள் வகுத்த அறத்தை எடுத்துரைக்கின்றனர். அருந்தவங்கள் செய்து தானதருமங்கள் கொடுத்துத் தேர்க்கா லேறப் பசுவைக் கொன்ற அரசிளங் குமாரனின் பாவத்துக்குக் கழுவாய் காணலாமென்கிருர்கள். மன்னவன் ஒப்பவில்லே; முன்னேயச் சட்டத்துக்கு அது முரண்பாடுடையதென்கிருன்:

என் மகன் செய்பாதகத்துக் கிருந்தவங்கள் செயவிசைந்தே
அன்னிய னேருயிர் கொன்ருல் அவனேக் கொல்வேனுனல்
தொன்மனு நூல் தொடைமனுவால் துடைப்புண்டதெனும்
வார்த்தை
மன்னுலகிற் பெற மொழிந்தீர் மந்திரிகள் வழக்கென்ருன்.

எனவே,

தோற்றமுடைஉயிர்கொன்ருன் ஆதலினுல் துணிபொருள்தான்
ஆற்றவுமற் றவற்கொல்லும் அதுவேயாமென நினேமின்.

என்று சட்டமுடிவு செய்கிருன். முடிபை நிறை வேற்ற அமைச்சனிடம் ஆணேயிடுகிருன். அமைச் சன் ஆணேயை மறுக்கவும் இயலாது, கொடிய சட்டப்படி அரசிளங்குமாரனேக் கொல்லவும் துணி வில்லாது தத்தளிக்கிருன். சட்டத்துக்கும் கருணேக்கும் நெஞ்சில் போர் நிகழ்ந்தது. கருணே வெல்கிறது. அமைச்சன் தற்கொலே செய்து கொள்கிருன். உடனே அரசனே தன் முடிபை நிறைவேற்றுகிருன்:

ஒரு மைந்தன் தன்குலத்துக்கு
  உள்ளானென்பது முணரான்
தருமந்தன் வழிச்செல்கை
  கடனென்று தன் மைந்தன்
மருமந் தன்தேராழியுற
  வூர்ந்தான் மனுவேந்தன்
அருமந்த அரசாட்சி
  அரிதோ மற்றெளிதோதான்.

சோழனின் நீதி முறையிலே மற்ருெரு நுட்பமும் கவனித்தற்குரியது. உயிருக்கு உயிரை வாங்க வேண்டு மென்றிருந்த சட்டத்தைத் தன் மகனிடத்தும் நிறைவேற்றினன் என்பது மட்டுமல்ல; எவ்வகையில் முதற்கொலை நடந்ததோ, அதே வகையில் தண்டனையும் அமைய வேண்டுமென்ற வழக்குச் சட்டமும் இருந்ததாகத் தெரிகிறது. பசு தேர்க்காலிற்பட்ட இறந்தது. அதற்குத் தண்டனை பசுவைக் கொன்றவனும் தேர்க்காலிற்பட இறக்க வேண்டும். இது அபிசீனியர்களிடை வழங்கிய ஒரு சட்டத்தை நினைவூட்டுவதாக இருக்கின்றது. இரு சிறுவர்ககள் விளையாடச் சென்ருர்கள். ஒருவன் மரத்தின்மீது கனி கொய்ய ஏறினன். மற்றவன் பொறுக்கக் கீழே காத்துநின்ருன். ஏறினவன் தவறிக்கீழே நிற்பவன்மீதேவிழ, பின்னவன் உயிர் துறந்தான். தண்டனை என்ன? இறந்த சிறுவன் தாய் தன் மற்ருெரு மகனை மரமீது ஏற்றி, குற்றவாளியின் கழுத்தில் குதிக்கச் செய்ய வேண்டும்!

உயிருக்கு உயிர் ஈந்து, உயிருக்குச் சாந்தி கண்டதுபோல், ஊனுக்கு ஊனீந்து உடலுக்குச்

சாந்தி காணும் நெறி சமூகச் சட்டத்திலிருந்து பழந் தமிழர் மருத்துவ முறையுள்ளும் புகுந்ததாகத் தெரிகின்றது. இதற்கும் பெரிய புராணத்தில் சான்று காணலாம். அண்ணலார் திருக்காளத்தியப்பர் கண்ணிலே துண்ணென உதிரம் பாய, திண்ணனார் பற்பல மூலிகைகளைப் பிழிந்து வார்த்தார். பயனில்லை; உடனே "ஊனுக்கு ஊன் மருந்து" என்ற பழைய முறை நினைவுக்கு வருகின்றது :

மற்றவர் பிழிந்து வார்த்த மருந்தினால் திருக்காளத்திக்
கொற்றவர் கண்ணிற் புண்ணீர் குறைபடா திழியக்கண்டும்
இற்றையின் நிலைமைக் கென்னே இனிச்செயல் என்றுபார்ப்பார்
உற்றநோய் தீர்ப்பதூனுக்(கு) ஊனெனும் உரைமுன்
கண்டார்"

பழைய முறை தெளிந்ததும் தன் கண்ணை எடுத்து அப்புகிறார்.

இதற்கினி என் கண் அம்பால் இடந்த பின் எந்தையார் கண்
அதற்கிது மருந்தாய்ப் புண்ணீர் நிற்கவும் அடுக்கும் என்று
மதர்த்தெழும் உள்ளத்தோடு மகிழ்ந்துமுன் இருந்துதங்கண்
முதற்சர மடுத்து வாங்கி முதல்வர் தங்கண்ணில் அப்ப

எதிர்பார்த்த பலனை அளிக்கிறது. ஆறாத இன்ப அன்புப் பெருக்கால் திளைக்கிறார்.

நின்ற செங்குருதி கண்டார் நிலத்தினின் றேறப் பார்த்தார்
குன்றென வளர்ந்த தோள்கள் கொட்டினார்; கூத்தும் ஆடி
நன்று நான் செய்த இந்த மதி என நகையும் தோன்ற
ஒன்றிய களிப்பினாலே உன்மத்தர் போல மிக்கார்.

நெடுங்காலமாகக் கொலைக்குற்றத்துக்குக் குற்றவாளியைத் "தூக்கிலிடுக" என்று நீதிபதிகள் தீர்ப்பளித்துவந்தனர். அவ்வாறே தூக்கிலிட்டு வந்தனர்.
சென்று சிந்தையில் [illegible] புளிச்
ஒரு சமயம் ஒரு [illegible] வந்தது. தீர்ப்

புப்படி அவனைத் தூக்கிலிடுகையில், வக்கீல் இடைப் புகுந்து, "தூக்கிலிடுக" என்பதுதான் தீர்ப்பே தவிர, "தூக்கிலிட்டுக்கொல்க" என்றில்லை. எனவே தூக்கிலிட்டதும் மறுகணமே அவனை விடுவிக்கவும்" என்று வாதாடித் தன் கட்சிக்காரனுக்கு வெற்றியும் கண்டார். அன்று முதற்கொண்டு நீதிபதிகளெல்லாம் "உயிர்போகும் வரைத் தூக்கிலிடுக" என்று மிக ஜாக்கிரதையோடு தீர்ப்பெழுதி வருகிறார்கள். திருவாரூரி லாண்ட மனுச்சோழனும் தேரைமட்டும் தன் மகன்மீது ஊர்ந்து விட்டு, பின்விளைவு எப்படியாயினுமாகுக என்றிருந்தானில்லை. அவன் உயிர் போகும் வரை ஊர்ந்தான் என்பதைக் குறிப்பிடச் சேக்கிழாரும், "உற ஊர்ந்தான்" என்று எடுத்துக் காட்டினார்.

கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல், ஊனுக்கு ஊன், உயிருக்கு உயிர்— என்ற வஞ்ச நீதியே ஆதி நீதியாக எல்லாச் சமூகத்துக்கும் அமைந்திருந்தது. இது மிகக் கொடியதென்று படவே, பிற்காலத்துப் பல கழுவாய்கள் வகுக்கலாயினர். நடந்த குற்றத்துக்காகச் சமுதாயத்துக்கோ, அரசாங்கத்துக்கோ குற்றவாளி பொருளீடு செய்வதென்பதாகும். இதனை "உதிரப் பணம்" என்று சாசனங்களில் குறித்திருக்கிறார்கள். இது பிற்காலச் சோழராட்சியில் விரிவாகக் காணப்படுகிறதேனும் சேக்கிழார் போற்றும் மனுச்சோழன் காலத்திலேயே புகுந்து விட்டது; அமைச்சர்கள் அம்முறையான நீதியை எடுத்துச் சொல்கிறார்கள். ஆயினும்

அரசன் ஒப்பவில்லை. அவன் பழைய நீதியையே நெஞ்சில் உறப்பாகக் கொண்டிருந்தவன். புதுமையாய்வந்த குற்றஈடு நீதிமுறை அவன் மனதைப்பற்றவில்லை. அனல் மெல்ல மெல்ல அது தமிழ் நாட்டில் வேரூன்றியது. பன்னிரண்டாம் நூற்றுண்டின் இறுதிப் பகுதியில் ஆட்சி புரிந்த குலோத்துங்கச் சோழன் கல்வெட்டுகளுள் ஒன்றனிலே பின்வரும் நிகழ்ச்சி குறிப்பிடப்பட்டிருக்கிறது :

"ஒரு சமயம் இருவர் தங்கள் வயலில் ஒரு எருமை மாடு பயிர்களை மேய்வது கண்டு அதை நன்ருய் அடித்தார்கள். அதனுல் எருமை இறந்துவிட்டது. அச்செய்தியை அவர்கள் பட்டர்களுக்கு (கிராம சபையினருக்குத்) தெரிவிக்க, பட்டர்கள் பக்கத்திலிருக்கும் கோயிலுக்கு ஒரு தீபம் கொடுக்கும்படிச் சொல்ல, அவர்கள் அப்படியே செய்தார்கள்."

வஞ்சநெறி, கழுவாய்நெறி என வழங்கப்பெறும் இவ்விருவகை நீதிமுறைகளும் நாலாயிரம் ஆண்டுகளுக்குமுன் அம்முராபி என்ற பாபிலோனிய அரசன் வகுத்த சட்டநெறியிலே கலந்து காணப்படுகின்றன. ஒருவனுக்கு மற்ளுருவனுல் கண்ணே, காலோ, பல்லோ, போக நேர்ந்தால், குற்றமிழைத்தவன் உரிய உறுப்பைத் தண்டனையாக இழக்கவேண்டும். வீடு விழுந்து, உடையவன் இறக்க நேரிட்டால் கட்டின சிற்பியோ, கொத்தனே இறக்க வேண்டும். வீட்டு உடையவனின் பிள்ளை இறக்க நேரிட்டால், கொத்தன், தச்சன் பிள்ளை

கொல்லப்படவேண்டும். குழந்தையைக் கொன்ருல் கொலைக்களமேறுவது கொன்றவனன்று; அவன் குழந்தை. அறுவை செய்து அதனல் ஒருநோயாளி கண்ணையோ, உயிரையோ இழக்க நேரிட்டால் மருத்துவன் விரல்கள் துண்டிக்கப்படும். அறிந்து ஒரு குழந்தைக்கு மற்ருெரு குழந்தையை மாருட்டம் செய்யும் செவிலியின் மார்பு அறுக்கப்படும்.

இத்தகைய உடல் தண்டனைகளுக்கு ஈடாக மெல்ல மெல்லப் பொருள் தண்டனை செலுத்துவது போதுமென்ற முறை வந்தது. எனவே அறுபது வெள்ளிப்பணம் கொடுத்துவிட்டால் ஒரு ஏழையின் கண்களைப் பறித்துக் கொள்ளலாம். அடிமையின் கண்களுக்கு முப்பது வெள்ளிப்பணம்தான் செலுத்தவேண்டும். பத்து வெள்ளி செலுத்திஞல் (அதாவது நூற்றைம்பது ரூபாய்) ஏழையை ஏழை வேண்டிய மட்டும் அடித்துக்கொள்ளலாம். ஏழை பணக்காரனை அடிக்கவேண்டுமானல் ஆறு மடங்கு (900ரூபாய்) செலவு. இப்படியாகக் கழுவாய் கண்டது நாலாயிரம் ஆண்டுகளுக்கு முன்னையப் பாபிலோனியச் சட்டம்.

அமெரிக்காவில் அண்மையில் ஒரு வழக்கு நடந்தது. போக்குவரத்தை நெறிப்படுத்தும்போலீஸ்காரன் சிவப்பு விளக்கைக்காட்டியும், ஒரு மாது நிற்காமல்மோட்டாரை ஓட்டிக்கொண்டு போனுள் என்பது குற்றச்சாட்டு. வழக்கு விசாரணைக்கு வந்ததும் அம்மையார் நீதிபதியிடம் தான் ஒருபள்ளிக்கூடத்து

ஆசிரியை என்றும், தன்வழக்கை உடனே விசாரணை செய்யவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டாள். நீதிபதியின் கண்கள் எதிர்பாராத ஒன்றைக் கண்டனபோல் ஒளிர்ந்தன. சொல்வார்: 'அம்மா, தாங்கள் பள்ளிக்கூடத்து ஆசிரியையா? நான் எவ்வளவு காலமாக ஒரு ஆசிரியரை விசாரணைசெய்ய வேண்டுமென்று காத்துக் கொண்டிருந்தேன். இன்றுதான் என் எண்ணம் நிறைவேறியது. நல்லது, தாங்கள் அந்த மேஜைப் பக்கமாக உட்கார்ந்து 'நான், சிவப்பு விளக்கைத் தாண்டியது தவறு' என்று ஐந்நூறுதடவை எழுதுங்கள்'' லெக்ஸ் டாலியானிஸ் தன் வினை தன்னைச்சுடும்.

**இராகம்—சாவேரி.** **ஆதி தாளம்**

**பல்லவி**

நானே பொது நீதி — தானே செலுத்திட
  நல்வரம் அருள்கோனே

**சரணங்கள்**

வட்ட உலகில் யாரும் பொதுவில் அனுபவிக்கும்
  மழைகால வெயில் பூதாதிபோலவே
இஷ்டர் அநிஷ்டர்தமர்எளியர் செல்வர் பெண் பூமான்
  என்னும் பேதம் உன்னுமல் ஏலவே
திட்டமாகச் சரி நீதிசெலுத்தலின்மனம் நாட்டிச்
  சிறிய வழக்கும் பெருவழக்கெனத் திண்ணம் நீட்டிச்
சட்ட சாஸ்திரிங்கள் மிக உணர்ந்தறி வினைத் தீட்டிச்
  சகல உயிர்களும் என்தன் உயிர் போல் பாராட்டிச்
சிட்ட பரிபாலனம் என்னும் முடி சூட்டித்
  தீயர்மொழி புகாமற் செவிவழிபூட்டிக்
கொட்டஞ்செய் துட்டர் கண்ணில் விரலை விட்டாட்டிக்
  கூ கூ வெனப் பேய் கதறும்படி மாட்டி நானே

— **வேதநாயகம் பிள்ளை.**

# இறப்பும் புதைப்பும்

வாழ்க்கை மாளிகைக்கு "உள்ளே" நுழையும் பாதை ஒன்றே. "வெளியே" போகும் பாதைகள் பற்பல. நுழைந்தோரெல்லாம் போயே ஆக வேண்டும். சிலர் சின்னாட்கள் தங்குகின்றனர்; சிலர் பன்னாட்கள் தங்குகின்றனர். ஆனால் என்றாயினும் பிறந்தோர் இறந்தே ஆகவேண்டும்.

பெரியார் அரவிந்தர் பிறந்தார். பெருவாழ்வு வாழ்ந்தார். தேசத் தொண்டிற் கலந்தார். தேசங் கடந்த காலங்கடந்த ஆன்ம நெறியில் திளைத்தார். பயிலரிய யோக நெறிபயின்றார். எண்பதாவது ஆண்டில் மாளிகையைவிட்டு "வெளியே" ஏகி விட்டார். அழிவே உருவான பூத உடல்கூட அழியா முறையில் இருப்பதாக மருத்துவர் கூறுகின்றனர். கோவாவில் பிரான்சிஸ் என்ற அடியார் உடல் பல நூற்றாண்டுகளாயும் இன்னும் அழியாத முறையில் இருப்பதாகக் கத்தோலிக்கத் தொண்டர்பலர் ஆண்டாண்டு சென்று கண்டு திரும்புகின்றனர். பருப்பொருளின் எல்லைகண்டோம் என்று இறுமாந்த விஞ்ஞானம் திகைக்கின்றது.

உயிர் தான் அழியாத்தன்மையது; உடம்பு நீரிற்குமிழி போன்றதே. புள்பறந்த பின்னரும் தனித்தொழிய நின்ற குடம்பை காலநியதி கடந்து

நிற்கும் யாதாயினும் ஒருசித்தி உண்டா? இத்தகைய ஒருசித்தி கைவர மனிதன் பற்பல நூற்றாண்டுகள் முயன்றுள்ளான். பயனில்லை என்று கண்டான். பயன் பெற்றால்தான் என்ன? வால்வுகள் கெட்ட பின்பு ரேடியோப் பெட்டியை வைத்தென்ன பயன்? நாதம் பிறக்குமா? இசை ஒலிக்குமா? மீண்டும் புதுப் புது வால்வுகளைப் பொருத்திப் புதுவாழ்வைக் கொள்ளலாம் என்ற நம்பிக்கைபோலும்: பெட்டியைப் பழுதில்லாது காப்பாற்றினால் என்றாயினும் திரும்பவும் இசை முழங்கச் செய்யலாம் என்ற ஆசை போலும்.

இந்த ஆசை பேராசையாகப் பல சமூகங்களில் இருந்து வந்துள்ளது. மரணத்துக்குப்பின் மனித நிலை என்பது பற்றி எங்கும் ஆராய்ச்சிகள் நடைபெற்று வந்துள்ளன. நடை பெற்றுக் கொண்டுமிருக்கின்றன. விஞ்ஞானிகளுள்ளே ஸர் ஆலிவர் லாட்ஜ், நாவலாசிரியருள்ளே கானன்டாயில் போன்றோர் இந்தத்துறையில் வருந்தி உழைத்தவர்கள். இறந்தாரோடு பேசும் சங்கங்கள் மேலை நாடுகளில் ஆராய்ச்சி முறையில் நடைபெற்று வருகின்றன. ஆண்டாண்டு அனுபவங்களை அறிக்கையிட்டு வருகின்றன. ஆவி உலகோடு உரையாடினதாக விரிவான பல நூற்கள் வெளியாயிருக்கின்றன. அவை பொய்யென்றும், செப்பிடுவித்தையென்றும் பலர் கருதுகின்றனர். மெய்யென்றும் தாம் கண்ணுற் கண்டதென்றும் பலர் சாதிக்கின்றனர். மரணத்துக்குப்பின் மனிதர் உயிர் நிலை என்பது பற்றி மனிதன் எவ்வளவு கவலை காட்டி

யுள்ளானே அதனிலும் மிகுந்த அளவுக்கு மரணத் துக்குப்பின் மனித உடல் பற்றியும் கவலை கொண்டிருக்கிறான்.

உயிர் நீங்கிய உடலை இருவகையில் நடத்து கிறோம். ஒன்று பூமிக்குள் புதைத்துப் பேணுவது; மற்றொன்று எரியில்கருக்கிச் சாம்பராய்க் காணு வது. உயிர்நீத்த உடலத்துக்கு மனிதன் செய்யும் இவ்விருவிதச் சிறப்புகளிலும், புதைப்பதே மிகப் பழமையானது. மரணத்துக்குப் பின்னும் வாழ்வுண் டென்று மனிதன் நம்பினான். பறந்துபோன பறவை திரும்பாதோ என்று ஏங்கினான். அங்ஙனம் திரும்புங்கால் கூண்டு காணாது போயிடிலோ? எனவே கவலையோடு பேணலாயினான்.

இந்த அடிப்படையில்தான் யூதரும் அவர் சமய வழிவந்த கிருஸ்தவரும் இன்றுகாறும் பிணத்தைப் புதைக்கும் பழக்கத்தைக் கொண்டிருக்கின்றனர். நீக்கமற இயங்கும் படைப்பு ஒருநாள் திடீரென நிற்கும்; தேவதூதன் எக்காளத்தை எடுத்து ஊது வான். அப்பொழுது செத்தோர் எல்லாம் பிழைத் தோராவர். எல்லோரும் குபீரென்று வான நாட்டை நோக்கி ஒன்றாய்ப் பயணஞ் செய்வார்கள். அந்தநாளில் உடலங்களில்லாதவர் என் செய் வார்கள்? மிகுந்த முன் எச்சரிக்கையோடு பாது காத்து வைத்துக் கொள்ளாதார்க்கு மரணத் துக்குப்பின் மறு வாழ்வேது?.

“இதோ, ஒரு இரகசியத்தை உங்களுக்கு அறி விக்கிறேன். நாமெல்லோரும் நிரந்தரமாய் நித்

திரை செய்யப் போவதில்லை; கடைசி எக்காளம் ஒலிக்கையிலே, கணப்பொழுதில், இமைப்பொழுதில், எல்லோரும் வேற்றுருவாய் எழுவோம்."

"எக்காளம் தொனிக்கும்; அப்பொழுது மரித்தோர் அழிவில்லாதவராய் எழுவார்கள்; நாமும் மாற்றுருவில் சமைக்கப் பெறுவோம்."

"அழியுந்தன்மையதாகிய இது அழியாமையையும், இறக்குந்தன்மையதாம் இது இறவாமையையும் பெற்று நிற்கும்."

"அழியுந்தன்மையாம் இது அழியாமையையும், இறக்குந்தன்மையதாம் இது இறவாமையையும் பெற்று நிற்கையிலே, மரணம் வெல்லப்பட்டு, விழுங்கப்பட்டது என்று எழுதியுள்ள மொழிகள் நிறைவேறும்."

இது இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் எழுந்த பரிசுத்த வேதாகமம்-பைபில்-கண்ட நுட்பம். இதனாலேயே இறந்த உடலைப் பேணுவதற்கு இருக்கும்போதே கல்லறைகளைக் கட்டிக்கொண்டு இன்றுகாறும் பல கிருஸ்தவ அன்பர்களிருக்கின்றனர்.

அழியாது உடலைப்பேண வேண்டுமென்று அதிகப் பொருட் செலவில் உறுதியான சவப்பெட்டிகளைச் முன்பாகவே அழகாகவும் நன்றாகவும் பலர் செய்து கொள்கின்றனர். செல்வம் செழித்த அமெரிக்காவில் நடைபெறும் எல்லாத்

தொழில்களுமே பெருந்தொழில்களாய் நடப்பது போல, இந்தப் புதைப்புத் தொழிலும் அதி சிறப்பாக விரிவாக நடைபெறுகிறது. கறுப்பு வர்ணம் பூசிய பயங்கரச் சவப்பெட்டிகளை இன்று காண்ப தரிதாய்விட்டது. விலையுயர்ந்த மரத்தாலோ, பளப் பளத்த உலோகத்தாலோ பெட்டிகள் செய்யப் படுகின்றன. அரிய கலையழகு இழைக்கப் பொலி கின்றன. பல்லாயிரம் டாலர் பெறுமானதாக இருக்கின்றன. பெட்டியைச் சுற்றி நீர், பூச்சி முதலியன புகாதவாறு எஃகுக்கவசங்கள் செய்யப் படுகின்றன. கயிற்றைக்கட்டிப் பெட்டிகளைப் பூமிக் குள் இறக்கும் முறை கர்ணடகமாகி விட்டது. அதற் கென்று தானே இயங்கும் ஒரு இயந்திரம் இருக் கின்றது. இது பெட்டியயை மெல்ல மெல்ல நில மட்டத்துக்குக் கீழே இறக்குகின்றது. நிலமட்டத் துக்குமேல் இருக்கின்றவர் கண்களுக்கு எட்டாத வகையில் மறையச் செய்கின்றது. “மண்ணே மண் ணோடு சேர்” என்பதற்காக மண்வெட்டியில் மண் ணெடுத்து எறியும் கொடுமை நீங்கிவிட்டது. மலர்ச் செண்டொன்று மண்ணின் அறிகுறியாய் யாக்கை நிலையாமைத் தத்துவத்தை எளிதில் விளக்கி விடு கின்றது. இறுதி வணக்கத்தை ஐயர் விரைந்து முடிப்பதற்குள், குழி மூடப்பெற்று, பசிய நிறச் செயற்கைப் புல்லும் பட்டாடை விரித்ததுபோல் முளைத்துவிடுகிறது. என்ன கலை! புதையற்கலை, சாவுக்கலை.

செத்தார் மீண்டும் உயிர்த்தெழுவர். எனவே உடலங்களை எரித்துப் பொசுக்காது செவ்வனே காத்துக்கொள்ளுங்கள் என்பது யூதர், கிருஸ்துவர் போன்றவர் நம்பிக்கைதான் என்று வெகுகால மாக நினைத்திருந்தேன். ஆனால் பிற்காலத்தில் அருட் பெருஞ்சோதி தனிப்பெருங்கருணைத் திருவருட் பிரகாச வள்ளலார் இராமலிங்க அடிகள் நூற்களைப் படிக்கையில், அதே கருத்து வற்புறுத்தப்படுவதைக் கண்டு திடுக்கிட்டேன். இன்றைக்கு எழுபத் தொன்பது ஆண்டுகளுக்குமுன் — துல்லிபமாகச் சொல்ல வேண்டுமானால், பிரமோதூத ஆண்டு (கி.பி. 1871) பங்குனித் திங்கள் பதினெட்டாம் நாள் "சாலை சம்பந்தம் உடையவர்களுக்கு மாத்திரம்" விடுத்த "சமாதி வற்புறுத்தும் பத்திரிகை" யில் பின்வருமாறு காண்கிறோம்:

திருச்சிற்றம்பலம்.

அன்புள்ள நீங்கள் சமரசவேத சன்மார்க்க சங்கத் தருமசாலைக்கு மிகவும் உரிமையுடையீர் களாயின் உங்களுக்கு உண்மையுடன் அறிவிப்பது:

நீங்களும் உங்களை அடுத்தவர்களும் சிற்றம் பலத் தந்தையார் திருவருளால் சுகமாக வாழ்வீர் களாக.

கர்மம், காலம் முதலிய பேதங்களால் யாருக் காயினும் தேகஆனி நேரிட்டால் தகனஞ்செய் யாமல் சமாதியில் வைக்கவேண்டும்.

இறந்தவர்கள் திரும்பவும் எழுந்து திரும்ப நம்முடன் இருக்கப் பார்ப்போம் என்கிற முழு நம்பிக்கையைக் கொண்டு எவ்வளவுந் துயரப்படாமலும், அழுகுரல் செய்யாமலும் சிற்றம்பலக்கடவுள் சிந்தையுடனிருக்க வேண்டும். புருடனிறந்தால் மனைவி, தாலி வாங்குதல் வேண்டாம். மனைவி, இறந்தால் புருடன் வேறு கல்யாணப் பிரயத்தனம் செய்ய வேண்டாம். தெரிவிக்கத் தக்கவர்களுக்குத் தெரிவித்து ஒரு தினத்தில் நேரிட்டவர்களுக்கு நேரிட்டமட்டில் அன்னவிரயஞ் செய்யவேண்டும். இவ்வாறு உண்மையாக நம்பிச் செய்யுங்கள். செய்திருந்தால் சமரசவேத சன்மார்க்க சங்கமும் மேற்படித் தருமச்சாலையும் நிலைபெற விளக்கஞ் செய்யும் பொருட்டாகவும் கருணைகூர்ந்து எனது தந்தையாராகிய எல்லாம் வல்ல திருச்சிற்றம்பலக் கடவுள் பார்வதிபுரம் சமரசவேத சன்மார்க்க சங்கத் தருமச்சாலைக்கு எழுந்தருளிக் காட்சி கொடுக்கும் தருணம் மிகவும் அடுத்த சமீபமாக இருக்கின்றது. அந்தத் தருணத்தில் சாலைக்கு உரியவர்களாக இருந்து இறந்தவர்களையெல்லாம் எழுப்பிக் கொடுத்தருளுவார். இது சத்தியம், சத்தியம்.

இந்தக் கடிதம் வெளிப்பட்டறிந்து கொள்ளாமுன் இறந்து தகனமானவர்களையும் எழுப்பியருளுவார்; இது வெளிப்பட்டறிந்தபின் தகனஞ்செய்யக் கூடாது. அது சன்மார்க்க சங்கத்திற்குத் தக்கதல்ல. ஆதலின் மேற்கண்டபடி உண்மையான நம்பிக்கையோடு வாழ்வீர்களாக.

எனக்கு உலகவறிவு தெரிந்தது தொட்டு, எனது தந்தையார் திருவருளை நான் அடையும் வரையில், என்னுடன் பழகியும், என்னை நம்பி அடுத்தும், என்னைக் கேள்வியால் விரும்பியும், எனக்குரிமைப் பட்டும், இருந்து இறந்தவர்களையெல்லாம் எழுப்பிக் கொடுத்துச் சமரச சன்மார்க்க சங்கத்தை விருத்தி செய்விக்கத் திருவுளத்துக் கருதிய, பெருங்கருணை வள்ளல் சாலைக்குரியவர்களாகி இருந்தும், அவ நம்பிக்கையுடனிருக்கிறவர்கள் விஷயத்திலும், இந்த உபகாரம் செய்தே அருளுவார். ஆனால், அவர்கள் சன்மார்க்க சங்கத்திற்கு மாத்திரம் அருகரா கார்கள்.

ஆதலின் நம்பிக்கையுடனிருங்கள். பெரிய களிப்பை அடைவீர்கள். இது சத்தியம், சத்தியம்.

சாலை சம்பந்தமில்லாவர்களுக்கு இந்தக் கடி தத்தைத் தெரிவிக்க வேண்டாம்.

இப்படிக்கு
**சிதம்பரம் இராமலிங்கம்**

வள்ளலார் இந்த அறிக்கையோடு நிற்கவில்லை. அருட்பா ஆறுவது திருமுறையிலே இரங்கல் என்ற தலைப்பில் 111-வது பதிகமாக இதே பொருளை வற் புறுத்திப் பத்துப் பாக்கள் காணப்பெறுகின்றன. அப்பாக்களை வள்ளலார் வாழ்வோடும் கருத்தோடும் நினைந்து ஆராய்கையில், உயிர்கள் மாட்டு அவர்

கொண்ட எல்லையற்ற அன்பின் பெருக்குப் புலனு கிறது. அருட்சோதி வருகின்ற தருணமாகிவிட்டது; வந்ததும் இறந்தவர்கள் பலர் எழுவார்கள், அங் ஙனம் எழும்போது உடல்களை ஒழுங்காக வைத்துக் கொள்ளவேண்டும்; அனைவரும் இறவாத இன்ப வாழ்வு பெறவேண்டும் என்ற தன்மையான அன்பு ஒன்று. அதோடு இளந்தளிரனைய உணர்வு பெற்ற அவர் கனிவு உள்ளத்திலே, இறைவன் சமைத்து இறைவன் நடம்புரிந்த இந்த உடலத்தை எரிப்பது கொடுஞ்செயல் என்று பட்டதோ? வரம்பிகந்த தனது சீவ காருண்ய நெறிக்கு அது முரணுவ தாய்த் தோன்றியதோ? இங்ஙனமாக ஐயுறுமாறு அமைந்திருக்கின்றன ஒன்றிரண்டு பாக்கள்:-

பிறந்தவரை நீராட்டிப்பெருக வளர்த்திடுகின்றீர்,
பேயரே நீர்
இறந்தவரைச் சுடுகின்றீர் எவ்வண்ணம் சம்மதித்தீரோ,
இரவில் தூங்கி
மறந்தவரைத் தீமூட்ட வல்லீரால் நும்மனத்தை வயிரமான
சிறந்தவரையெனப் புகழச் செய்துகொண்டீர் ஏன் பிறந்து
திரிகின்றீரே.

இதே கனிவு,

புலைத்தொழிலே புரிகின்றீர் புண்ணியத்தைக் கருங்கடலிற்
போகவிட்டீர்
கொலைத்தொழிலீற் கொடியீர்நீர் செத்தாரைச் சுடுகின்ற
கொடுமை நோக்கிக்
கலைத்தொழிலீற் பெரியருளங் கலங்கினர்..........

என்ற அடிகளிலும் வெளிப்படுகின்றது.

எனவே உடலைச் சமாதி செய்வது, அல்லது புதைப்பது என்பது முன்னைப் பழமைக்கும் முன்னைப் பழமையாகிப் பின்னைப் புதுமைக்கும், பின்னைப் புதுமையாம் பெற்றிகொண்டது. பணத்தைப் புதைக்கத் தெரிந்துகொள்ளு முன்னரே பிணத்தைப் புதைக்கத் தெரிந்துகொண்டது மனித அறிவு. அங்ஙனமாயின் மிகப் பழைய மக்கள் என்று சொல்லிக் கொள்ளும் தமிழரிடையே புதைத்தலும் எரித்தலும் ஆகிய இரு வேறு பழக்கங்களும் காணப்படுகின்றனவே. பொதுவாகத் துறவியரைப் புதைப்பதும் இல்லறத்தாரைச் சுடுவதுமாக இருந்தாலும், சாதிதோறும் பழக்கங்கள் வேறாயிருக்கின்றன. சிறுகுழந்தைகளானல் தலைப் பிள்ளையா யிருந்தாலொழிய, புதைப்பதே பெரு வழக்கு. மலையாளத்தில் இந்துக்களில் பெரும்பாலோர் புதைக்கும் பழக்கமே கொண்டிருக்கிறார்கள். அம்மை முதலிய தொத்து நோயால் இறந்தோரைப் புதைக்க எங்குமே அனுமதிப்பதில்லை. எனவே தமிழருக் கென்றோ, இந்துக்களுக்கென்றோ இந்த வகையில் எவ்விதத் தனித் தத்துவமோ, பழக்க நெறியோ இருப்பதாகத் தெரியவில்லை.

"தமிழர்மதம்" என்று மறைமலை அடிகள் எழுதிய நூலைப்படித்துப் பார்த்தேன். பிணச் சடங்கைப் பற்றிப் பேசுமிடத்துச் சுடுவதைப் பற்றிக் குறிப்பிடுகின்றாரே யொழிய புதைப்பதைப்பற்றி எதுவுங் காணோம்.

சென்றே எறிப ஒருகால்; சிறுவரை
நின்றே எறிப பறையினை; நன்றேகாண்
முக்காலைக் கொட்டினுள் மூடித்தீக் கொண்டெழுவர்.
செத்தாரைச் சாவார் சுமந்து

என்னும் நாலடியார் செய்யுளையும்

உயிரினை இழந்த உடலது தன்னைக்
காலும் ஆர்த்துக் கையும் ஆர்த்துக்
கூறை களைந்து கோவணங் கொளுவி
ஈமத்தியை எரியெழ மூட்டிப்
பொடிபடச் சுட்டுப் புனலிடை மூழ்கிப்
போய்த் தமரோடும் புந்திநைந் தழுவது
சலமெனப் படுமோ சதுரெனப் படுமோ

என்னும் கபிலர் அகவல் பகுதியையும் மேற்கோள் காட்டுகிறார். ஆனால் இவை தமிழ்ச்சாதியின் தொன்மை நோக்குகையில் மிகப் பிற்காலத்தன வென்றே கொள்ளவேண்டும்.

புதைபொருள் ஆராய்ச்சியின் விளைவுகளைக் காணும்பொழுது, சில உண்மைகள் புலனாகின்றன. நெல்லை மாவட்டத்து ஆதிச்ச நல்லூரிலும், புதுக்கோட்டை, ராமநாதபுரம் முதலிய வட்டாரங்களில் சிலவிடத்தும் பல மண்தாழிகள் கண்டெடுக்கப் பட்டுள்ளன. இவை பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டன என்று மதிப்பிட்டிருக்கின்றனர். இத்தாழிகளில் எலும்புக் கூடுகள் காணப்பட்டன. எனவே இறந்தாரைப் புதையல் செய்யும் அருங்கலன்களாய் அமைந்தனவே இவை என்பது விளங்குகின்றது.

இறந்தவரைப் புதைக்கும் முறைப் பெரும் தொழிலாய் கவின் கலையாய் இன்று அமெரிக்காவில் வளர்ந்துள்ளதென்றேன். ஆனால் உலகம் யாவும் வியக்கும் அழகுச் சிற்பங்கள் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே இவ்வகையால் தோன்றி விட்டன. ஒன்பது உலக அதிசயங்கள் என்று சொல்வதில் ஒன்று எகிப்தில் உள்ளது; மற்றொன்று இந்தியாவில் உள்ளது.

இரண்டும் இறந்தோரைப் புதைக்குமாற்றில் எழுந்தனவேயாகும். ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன் ஆண்டுபாரோ எனப்படும் எகிப்திய மன்னர் தம் வாழ்நாளிலேயே தமக்குக் கல்லறை செய்து, அக்கல்லறை என்றும் அழியாவண்ணம் அதன் மீதே வானளாவிய கோபுரம் எழுப்பி, அக்கோபுரமும் பழுதடையா வண்ணம் சுற்றிலும் சுவர்களும் எழுப்பிவைத்துப் போயினர். அவையே பிரமிட் என்ற பெயரால், உலகயாத்ரீகர்களுக்கெல்லாம் பெருங்காட்சி விருந்தாய், ஆராய்ச்சியாளர்க்கு எல்லாம் பெருஞ் சோதனையாய், சரித்திர நிபுணர்க்கெல்லாம் அணைகடந்த திகைப்பளிப்பதாய் சிறந்து இன்றும் ஓங்கி நிற்கின்றன.

காதல் மனைவி; கட்டழகி; இன்பத்தும் துன்பத்தும் இணை பிரியாது பங்குகொண்ட இன்னமுத மனையாள் இறந்துவிட்டாள். பெருமன்னன் ஷாஜஹான் பிரிவினால் தாங்கொணாத் துயரத்தில் ஆழ்ந்தான். இன்பமாயினும், துன்பமாயினும்

உணர்ச்சி வேகமே அரியன படைப்புக்கு ஆற்றலாயமைகின்றது. மன்னனின் இன்பங்கலந்த துன்ப வேகத்திலே அழகுக் கனவொன்றெழுந்தது. சிற்பக்கனவு; கலைக்கனவு; கவிதைக் கனவு; யமுனையாறு வற்றாது பாயும் கரைப்பாங்கரிலே, முல்லைக் கோவலர் குழலிசைக்கும் பரந்த வெளிப்பரப்பிலே வெள்ளியைப் பாலிலே குழைத்து, வெண்ணெயால் சுண்ணம் பூசிய தொப்ப வெள்ளைக் கல்லிலே அவள் கல்லறை மீதே மாளிகை யொன்று மெல்ல மெல்ல எழுந்தது. கனவு நனவாகியது. கவிதை சிற்பமாகியது. பாட்டு கல்லோவியமாய், கலை அற்புதமாய் வளர்ந்தது. வெண்ணிலவிற் பார்க்கையிலே விழுங்கி விடலாம் போலிருக்கின்றது. காதலர்கள் கோடாத அன்புபோல் எவ்விதக் குறைபாடுமின்றி அமைந்தது எழிலின் கலைமாளிகை தாஜ்மஹால்.

பிரமிட் என்ற பிரமாண்ட கோபுரங்கள் எழுப்புவதோடமையாது எகிப்தியர் இறந்த உடலைப் பதஞ்செய்து பார்க்கும் திறனையும் கைவரப் பெற்றனர். இங்ஙனம் பதன்செய்வித்த உடலங்களை ஆங்கிலத்தில் மம்மிகள் என்று சொல்லுகிறார்கள். அவைகளைப் பல பொருட் காட்சிச் சாலைகளில் இன்றுகாறும் காணலாம். ஐயாயிரம் ஆண்டுகட்கு முன் அவற்றை எவ்வாறு பதனிட்டனர் என்பது பற்றி, இரண்டாயிரம் ஆண்டுகட்குப் பின்னே வந்த எரடாட்ஸ் என்னும் கிரேக்க வரலாற்று ஆசிரியர் கண்டறிந்து எழுதியுள்ளார்.

"முதலிலே ஒரு இரும்புக் கொக்கியால் நாசி வழியாக மூளையைக் குடைந்து வெளியே இழுத்தனர். எஞ்சியதைச் சில மருந்து வகைகளால் இழுத்துக் கொண்டனர். பின்னே கூரிய ஒரு கல் முனையால் இடுப்பைக் கிழித்துக் குடலை வெளியே எடுத்தனர். பிறகு வயிற்றி னுட்புறத்தை நன்ருய்ச் சுத்தம் செய்து ஈந்தைக் கள்ளால் கழுவினுர்கள். அதன் பின்னே நறுமணப் பொடிகள் தூவினுர்கள். பின் பல வகையான அகில் போன்ற வாசனைத் திரவியங்களை உள்ளே அடைத்துக் கீறிய வயிற்றைத் தைத்தனர். இது முடிந்ததும் சோடியம், அலுமினியம் போன்ற உலோகங்களின் மண் சத்துக்கொண்ட நேட்ரன் என்னும் ஒரு வகை இரசாயனத் தைலக் கொப்பரையில் எழுபது நாள் முழுக வைத்தனர். எழுபதுநாள் கழிந்ததும் பிணத்தை எடுத்து நான நீராட்டி மெழுகுத் துணியால் சுற்றினுர்கள். அதன் பிறகு உறவினர் வந்து உடலத்தை எடுத்துச் சென்று மனிதஉருவத்திற்செய்த பிணப்பெட்டியில் இட்டுப் பூட்டினுர்கள். பின்னே நிலமட்டத்துக்குக் கீழே இருக்கும் பிண அறையில் சுவரோடு நட்டமாகச் சார்த்தினுர்கள். இந்த முறையில் மிகுந்த பொருட் செலவில் இறந்த உடலத்தை அவர்கள் பதன் செய்தார்கள்."

இறந்தவர்களைப் பதனிட்டு மம்மியாக்கும் பழக்கம் எகிப்தியரோடு நின்று விடவில்லை. அமெரிக்காவில் இன்றும் பலர் அதைக் கையாண்டு வருகின்றனர். தொழிலாளர் சர்வாதிகாரத்தை நிலை

நாட்டிய ரஷ்யப் புரட்சித் தலைவன் லெனின் உடலமும் பதனிட்டு மம்மியாக இன்று மாஸ்கோவில் கோவில் கொண்டுள்ளது. அமரத் தெய்வங்களை வணங்க மறுத்த மக்கள், மனித உடலத்தை அமரத்துவமாக்கி வணங்கி வருகிறார்கள். ஆண்டாண்டு தோறும் கொடுங் கூதிர்காலத்து, நாட்டுப் புறங்களிலிருந்து விவசாயிகள், தொழிலாளிகள் கடும் பயணஞ்செய்து, லெனின் சவத்தை வலம் வந்து ஆன்ம சாந்தியும், புது நம்பிக்கையும் பெற்றுத் திரும்புகின்றனர். பழைய கடவுள்கள் கழிந்தன; புதுக்கடவுள்கள் புகுந்தன. கடவுளர் அழியவில்லை. புரட்சிப் பக்தி நெறியோங்கப் பெரும் பிரசார உருவ வழிபாடாய் லெனின் மம்மி அமைந்துள்ளது.

சுமேரியர், பாபிலோனியர், எகிப்தியர், சீனர், ஆதிச்சநல்லூர், புதுக்கோட்டைப் பழந்தமிழர் அனைவரும், பிணத்தைக் கவலையோடு புதைப்பதோடமையாது, அப்பிணங்கள் வாழ்வுக்கு வேண்டிய உணவுப் பொருள்கள், பிற இன்ப நுகர்ச்சிப் பொருள்கள், அவர்கள் வாழ்ந்த பொழுது விரும்பிப் போற்றிய அருங்கலன்கள் போன்ற பலவற்றையும் கூடவே புதைத்து வருவாராயினர். இறந்தவர் உண்ணப் போகிறாரா? ஒரு கதை நினைவுக்கு வருகிறது.

ஒரு சீன வேலைக்காரன் தன் கிருஸ்தவ எஜமானிடம் சீன நண்பனின் அடக்கத்துக்குப் போய் வர வேண்டுமென்று அனுமதி கேட்டான். அனுமதி

யளித்த எஜமானன் வேடிக்கையாகப் "பழையசீன வழக்கப்படிக் குழியில் உணவு வைத்துக்கொண்டு வருவாயல்லவா?" என்ருர்.

"ஆமாம், எஜமான்" என்ருன் சீனன். மீண்டும் சிரித்துக்கொண்டு "நல்லது, அந்த உணவை உன் நண்பன் எப்பொழுது சாப்பிடப்போகிரு னென்று நினைக்கிருய்?" என்று எஜமானன் கிண்டல் செய்தான்.

சீன மிக நிதானமாக, "தாங்கள் சென்ற வாரம் அடக்கஞ் செய்த தங்கள் நண்பரின் குழியி லிட்ட பூச்செண்டை, அவர் என்று முகர்ந்து பார்க் கிருரோ அன்று என் நண்பனும் உணவு கொள் வான்" என்று பதிலளித்தான்.

புதைத்தல், எரித்தல் என்ற பழம் பெரு ஈம வழக்குகள் நீங்கலாகப் பாரசீக ஞானியான சோ ராஸ்தர் என்பவர் பிணப் பிரச்சினையைத் தீர்க்க மற்றும் ஒரு முறை வகுத்தார். வாழ்ந்தபொழுது இந்த உடலம் எவருக்காயினும் யாதானும் பயன்பட் டதோ என்னவோ, இறந்தபின்னரேனும் உலகுக் குதவட்டும்; காக்கை, கழுகுகளுக்காயினும் ஒருபொ ழுது உணவாய் அமையட்டும் என்று கருதி எடுத் தெறிய ஆணையிட்டார் இன்றும் பார்சிகள் பெரும் பாலாராய்க் குடியிருக்கும் பம்பாய் போன்ற நகரங் களிலெல்லாம் "மோன கோபுரங்கள்" இருக்கின் றன. இவற்றின்மீதே பிணத்தைஎடுத்து வைத்துவிடு

வண்ணமாயிருந்தான் குழந்தை நசிகேதன். கள்ள மறியா வெள்ளை உள்ளத்தில் மதலைமொழி குழறக் கேட்பான்; "அப்பா, என்னை யாருக்குக் கொடுக்கப் போகிறீர்கள்?" முன்பின் யோசனை யில்லாத தந்தை 'உன்னையா யமனுக்குக் கொடுக்கப் போகிறேன்" என்று தன்னையறியாது, தான் சொல்வது இன்னதென்றுணராது, ஏதோ மேலை நாள் வினைப்பயன் வந்துந்த மறுமொழி சொல்லி விட்டே தன் வண்மைத்தொழிலில் ஆழ்ந்திருந்தான் வேள்வியின் இயமானன். கொடுக்க வேண்டுவன வெல்லாம் கொடுத்து முடிந்ததும், சுற்றுமுற்றும் பார்த்தான். பிள்ளையைக் காணவில்லை. "நசிகேதா நசிகேதா" என்றழைத்தான், உத்தரம் இல்லை. வேள்விப் பயனைப் புதிது பெற்ற பேரறிவுக் கண்ணால் கூர்ந்து நோக்கினான். நசிகேதன் யமனுக்கு வழங்கப் பட்டதை உணர்ந்து தெளிந் தான்.

யமதருமன் திருமுன்றில் ஏழைப் பாலகன் ஊண் உறக்கமில்லாது மூன்று நாட்கள் காத்து நின்றான். தருமராஜன் பெருங் கொலுக் கலைந்து, நான்காம் நாள் நசிகேதனுக்குப் பேட்டி கிடைத் தது. தருமராஜன் சொல்வான்; "அந்தண என் விருந்தினனாய் வந்தவன் நீ. ஆயினும் மூன்றிரவு உனக்கு ஊணுறக்கமில்லாது காக்க வைத்துவிட் டேன். இதற்கு நான் கழுவாய் காண வேண்டும். மூன்று வரங்களை கேள், தருகிறேன்."

மனதுக்குகந்த இரண்டு வரங்களைக் கேட்டுப் பெற்றுவிட்டு, மூன்றாவது வரத்துக்கு வருகையில் நசிகேதன் சொல்வான்; "அரசே, எனக்கு ஒரு சிறு ஐயப்பாடு இருக்கிறது. அதைத் தீர்த்து வைத்தால் அதுவே தாங்கள் எனக்கு அளிக்கும் மூன்றும் வரமாகும். அதாவது ஒருவன் இறந்த பிறகு அவனுக்கு என்னவாகிறது? சிலர் சொல்கிறார்கள், அவன் பின்னும் வாழ்கிறான் என்று; சிலர் சொல்கிறார்கள், இல்லை என்று. இதைத் தாங்கள் எனக்கு உறுதியாக உணர்த்த வேண்டும்."

மறலி சொல்வான்; "நசிகேதா, இந்தக் கேள்வியை விட்டு வேறெதாவது வேண்டியதைக் கேட்டுப் பெற்றுக்கொள். இதைப் பற்றி அண்மைக் காலம் வரையில் தேவர்களிடத்திலேயே பெரிய திகைப்பு ஏற்பட்டிருந்தது. அது மிகவும் சிக்கலான விஷயம். நான் சொன்னாலும் உன்னால் எளிதில் புரிந்து கொள்ள முடியாது. வேறொரு வரத்தைக் கேள் என் அப்பனே" என்று நளினமாகக் காலதேவன் நழுவ முயன்றான்.

நசிகேதன் தளரவில்லை. "அரசே இதைப் பற்றித் தேவாதி தேவர்கட்குக் கூட ஐயப்பாடு இருந்ததாகச் சொன்னீர்கள். சொன்னால் எனக்கு எளிதில் விளங்காது என்றும் சொன்னீர்கள் அப்படியானால் தருமப்பிரபோ, தங்களை விட விளக்கமாக எனக்கு எடுத்துரைக்கும் ஆசிரியர் எங்கு

வாய்க்கப் போகிறூர்? என்ன வரம் நான் பெற்றென்ன? இந்த உண்மை தெரியாதவரை எல்லாம் வீணே" என்று மன்ருடினன்.

"நாடு தருகிறேன்; மாடு தருகிறேன்; நன்மக்களைத் தருகிறேன், கல்வியின்பம் தருகிறேன் கலை இன்பம் தருகிறேன், அழகின்பம் தருகிறேன், அழியாப் புகழின்பம் தருகிறேன்" என்று எதை எதையெல்லாமோ ஆசை காட்டினன் இறப்பின் நாயகன். ஒன்றுக்கும் அசைந்தானில்லை நசிகேதன். "தேவா! நாளை, நாளை நமனுடைய நாள் என்று கவலை வரும்போது எந்த இன்பம் இருந்தென்ன பயன்? வாழ்கிற வாழ்வும் ஒன்றுபாதியாகக் குன்றி விடுகிறதே. நாடு, மாடு, ஆடல், பாடல் எல்லாம் தாங்களே வைத்துக் கொள்ளுங்கள். இந்த உலக வைபோகத்தினுலெல்லாம் வருகிற இன்பம் எத்தனைப்பொழுது; வெறும் இந்திர ஜாலம். ஐயனே, தாங்கள் எழுந்தருளும்போது இவைகள் உடன் வந்து உதவுமா? தாங்கள் எத்தனை காலம் அரசாட்சி செய்கிறீர்களோ அத்தனைக்காலம் நாங்களும் வாழமுடியுமா? எனவே நான் எந்த வரம் கேட்டேனே அதைத்தான் தாங்கள் அருளல் வேண்டும். வான் மாறினும் மொழிமாருத வள்ளலே, மரணத்துக்குப்பின் மனிதர் என்னுவது? சற்றே தெளிவு படுத்த வேண்டும்" என்று இறுதி முறையாக இரந்தான்.

யமதர்மராஜன் வழியில்லாது வரத்தை ஈயும் வகையால், நசிகேதனுக்கு என்ன விளக்கினன்

என்பதை நான் இங்கு விளக்க முற்படவில்லை. அதற்குரிய துணிவு எனக்கில்லை. தேவாதி தேவர்களுக்கே தடுமாற்றந் தந்த ஒன்றை, காலதேவனின் அருவிருந்தாய் வந்த நசிகேதனுக்கே புரிந்து கொள்வதற்கு அரிதான ஒன்றை நான் எப்படித் துலக்கமுடியும்?

இறவாப் பெருவாழ்வு வேண்டுமென்று நசிகேதனும் விரும்பவில்லை; நானும் விரும்ப வில்லை. அல்லது வள்ளலார் போல,

மரணமெனும் பெருந்திருட்டு மாபாவிப்பயலே
வையகமும் வானகமும் மற்றகமுங்கடந்தே
பரணமுறு பேரிருட்டுப் பெரு நிலமுந்தாண்டிப்
பசையற நீ யொழிந்திடுகஇங்கிருந்தா
யெனிலோ
இரணமுற உனை முழுது மடித்திடுவேன் இதுதான்
என்னுடையான் அருளாணை என்குரு மேலாணை
அரணுறுமென்றனை விடுத்தே ஓடுகநீ நான்முன்
அருட் பெருஞ்ஜோதிப்பதியை அடைந்த
பிள்ளை காணே

என்று மரண தேவனைப் பார்த்து மார்தட்டவும் வரவில்லை. அல்லது சிவபெருமானைத் தூண்டிவிட்டு யமனைக் காலால் உதைக்கும் வேடிக்கையைப் பார்க்க வேண்டுமென்றும் கேட்கவில்லை. அதை மார்க்கண்டனே வைத்துக் கொள்ளட்டும். நாம் கேட்பதெல்லாம், துடிக்கும் ஒரு சிறு ஆவல் பூர்த்தியாக வேண்டும் என்பதே. அந்தக் காலக் கருந்திரையைச் சற்றே விலக்கி அப்பால் என்ன

நடக்கிறது என்று எட்டிப் பார்க்கவிட்டால் நமக்குப் போதும். ஒரு கணம் போதும். பிறகு தலையை இழுத்துக் கொள்வோம்.

இறந்தவருட் சிலர் ஆவியாக மீண்டும் சிலகால் உலவி வருகிறார்களென்றும், ஒரு சிலர்க்கு, ஒரொருகால் உருவமாய் வெளிப்படுவதாகவும், உரையாடுவதாகவும், ஒத்துழைப்பதாகவும் கேள்விப்படுகிறோம். என்னைப் பொறுத்த வரையிலும், நான் இந்தப் பேய் பிசாசுச் செய்திகளை நம்புவதில்லை. ஆனால் என்னைப்போலவே நம்பாதவர்களை நிரம்பக்கொண்ட மேலை நாட்டில், இத்தகைய தோற்றங்களைப் பற்றிச் சென்ற அறுபது எழுபது ஆண்டுகளாகத்தீவிர ஆராய்ச்சி நடைபெற்று வருகின்றது. இங்கிலாந்திலும் அமெரிக்காவிலும் இதற்கென தனி ஆராய்ச்சிக்கழகங்கள் நடைபெறுகின்றன. இந்தக் கழகங்களில் தக்க பல சான்றோர் உறுப்பினராயிருக்கின்றனர். புகழ்பெற்ற எழுத்தாளர், உளநூற்புலவர், பூதபௌதிக விஞ்ஞானிகள் போன்றோரெல்லாம் இதிற் பங்குகொண்டு அவ்வவர் ஊனக்கண்ணுற் கண்டவற்றையெல்லாம் அவ்வப்பொழுது குறித்து வருகிறார்கள். இதுதான் மேலை நாட்டு விஞ்ஞான முறையின் சிறப்பு. எதையும் விஞ்ஞானிகள் இறுதியான முடிபு என்று பிடிவாதமாக நிறுத்திவிடுவதில்லை. தனி விஞ்ஞானிகள் ஆணவமலம் மீதூரச் சிலகால் அவ்வாறு சாற்றமுற்பட்டாலும், விஞ்ஞானக்கலை அடக்க ஒடுக்கமாகவே இருந்து வருகிறது. புது ஒளி புகுந்தால்

பழையனவற்றைத் திருத்திக் கொள்ளத் தயங்குவதில்லை. முந்நூறாண்டுகளாக நியூட்டன் வகுத்த இழுப்பு ஆற்றலில் நம்பியிருந்த விஞ்ஞானம், திடீரென ஐன்ஸ்டீன் அது தவறு என்று கண்டு பிடித்ததும், பல பிரமாணங்களால் அதைச் சோதித்து மெய்ப்பித்து, இப்பொழுது நியூட்டன் தத்துவத்தைக் கைவிட்டுவிட்டது. இப்படியே துறை தோறும், துறைதோறும்.

ஹௌடினி என்னும் மாய வித்தைக்காரனின் புகழ் உச்சநிலையில் இருந்த காலத்தில் தான் அமெரிக்காவில் ஆவி உலகைப் பற்றிய ஆராய்ச்சியும் ஓங்கியிருந்தது. குறிப்பிட்ட சிலர் மீது, பூத உலகை நீத்த சிலர் ஆவி மேவி, அவ்வப்போது செய்திகள் தெரிவித்துச் சென்றதென்றும், இது எவ்வளவு உண்மை என்பதைப் பல விஞ்ஞானிகளும், புலவர்களும், ஆவிகள் தோன்றுவதாகக் கூறப்படும் கூட்டங்களுக்கு நேரிற்சென்று ஆராய்ந்து கொண்டிருந்தார்கள். இந்தத் தோற்றங்களில் ஒரு சில உண்மையாகவுமிருக்கலாம்; பல பொய்யாகவும் இருக்கலாம்.

ஆயினும் எல்லாமே ஏமாற்று என்று சொல்வதற்கில்லை. ராமகிருஷ்ண மடத்தைச் சார்ந்த அபேதானந்த அடிகள் பல ஆண்டுகள் அமெரிக்காவில் தங்கி, "மரணத்துக்குப் பின் மனித வாழ்வு" என்று 1944-ல் வெளியிட்ட நூலில் இவற்றின் உண்மையை வெளியிட்டிருக்கிறார். சாரதா

தேவி, விவேகானந்த அடிகள், அற்புதானந்த அடிகள், கீரீஷ் சந்திரகோஷ், நிவேதித்த அம்மையார் போன்றவர்கள் உருவங்கள் அவர்கள் இங்கு இறக்கும் தருவாயில் தமக்கு அமெரிக்காவில் ஆவி உருவாகத் தென்பட்டனவாகக் குறிக்கிறார். ஒவ்வொரு கட்டத்திலும் இந்த உருவங்கள் தோன்றி மறைந்ததும், உடனேயே அடுத்து இந்தியாவிலிருந்து மறைந்த விவரத்தைப் பற்றிய தந்தி தமக்குக் கிடைத்ததாகவும் தெரிவிக்கிறார்.

ஆவிகள் தோற்றுவிக்கும் ஒரு கூட்டத்துக்கு 1899-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் நான்காம் நாள் அபேதானந்த அடிகள் சென்றிருந்தார். வந்தவர்கள் மறைந்த தம் நண்பருள் எவரோடு தொடர்பு பெற விரும்பினரோ அவர் பெயர்களைக் கொடுத்தார்கள். அடிகள் தமது குருவான ஜோகன் என்பவர் பெயரைக் கொடுத்தார். உடனே அறையின் நடுவிருந்த டைப்ரைட்டர் இயங்கியது. நீல வர்ண எழுத்துக்களில் ஜோகன் என்ற பெயர் எழுதிய காகிதம் வந்தது. இதன் நுட்பம் என்ன என்று காண முற்பட்டார்.

"மறு நாட்காலை, ஆகஸ்டு மாதம் ஐந்தாம் நாள் பத்துமணிக்குக் கீலர் என்ற நண்பர் வீட்டிற்குச் சென்றேன். இவர் மேல் ஆவி மேவுவதாகவும் நேரில் வந்து நான் பார்க்கலாமென்றும் அழைப்பு வந்திருந்தது. கீலர் முன்னே, சன்னலுக்கருகே அசையும் நாற்காலி யொன்றில் அமர்ந்தேன். சன்

னல்வழி கதிரோன் ஒளி பாய்ந்து கொண்டிருந்தது. எனக்கும் கீலருக்கும் நடுவே ஒரு சிறு மேசை போடப்பட்டிருந்தது. அதிலே சமுக்காளம்போன்ற துணி விரிக்கப்பட்டிருந்தது. கீலர் இரண்டு கற்பலகைகளைக் கொடுத்தார். என் கைகளால் இரண்டையும் இரு புறங்களிலும் நன்ருகத் துடைத்தேன். கீலர் அவற்றை வாங்கிக் கொண்டு, மறு முறையும் தன் கைக்குட்டையால் துடைத்தார். பிறகு, நான் எந்த ஆவியோடு தொடர்பு வைக்க விரும்புகிறேனே அந்த ஆவியிடம் கேட்க விரும்பும் ஒரு சில கேள்விகளை எழுதச் சொன்னர். மறைந்த என் நண்பரின் தாய்மொழியில் எழுதலாமா என்று கேட்டேன். ‘செய்யுங்கள்’ என்ருர். ஒரு காகிதத்தை எடுத்து வங்காளி மொழியில் சில கேள்விகளை எழுதி, அந்த இரு கற்பலகைகள் மீது வைத்தேன். கற்பலகைகளின் இடையே அரை அங்குலம் நீளமுள்ள பல்பத் துண்டொன்றைக் கீலர் வைத்திருந்தார். பிறகு தனது கைக்குட்டையைக் கற்பலகைகளைச் சுற்றி மெல்ல வைத்தார். கற்பலகைகளின் இரு முனைகளை அவர் கையில் பிடித்துக் கொண்டார். மற்றிரு முனைகளையும் நான் கையில் பிடித்துக் கொண்டேன். இப்படியாகக் கற்பலகைகளை மேசைக்குமேல் அந்தரத்தில் பிடித்துக் கொண்டிருந்தோம். சில நிமிடங்கள் இருவரும் உரையாடினேம். உரையாடுவதால் ஆவி எழுதுவதற்கு எவ்விதத் தடையும் ஏற்படுவதில்லை என்று விளக்கினர். கீலர் சொல்வார்; ‘தங்கள் நண்பர் வருவாரோ என்னவோ, தெரியவில்லை; ஆயினும் நான் என்னலானவரை முயன்று

பார்க்கிறேன்' என்றார். சில நிமிடங்கள் சென்றதும் 'என்னுடைய பெயரையும் எழுதுவது அவசியமா?' என்று அவரைக் கேட்டேன். 'ஆம்' என்றார் அவர். பின் என் நண்பர் பெயரை ஆங்கிலத்தில் எழுதி இருக்கிறேனா என்றும் கேட்டார். 'இல்லை' என்றேன். 'அப்படியானால் என்மேல் வரும் ஆவிக்குத் தாங்கள் விரும்புகிறவரை அழைக்க முடியாது போகலாம். எனக்கு வழி காட்டியாக இருக்கும் ஆவிக்குத் தங்கள் மொழி தெரியாது' என்றார். இதைக் கேட்டதும் நான் மற்றொரு காகிதத்தில், 'ஜோகன்! தாங்கள் இங்கு இருக்கிறீர்களா? அப்படியானால் வங்காளியில் எழுதிய என் கேள்விகளுக்கு மறுமொழி கொடுங்கள் — சுவாமி அபேதானந்தா' என்று எழுதி, காகிதத்தை மடித்து, கற்பலகைகள் மீதே வைத்தேன். திரும்பவும் அவற்றை இருவருமாக முன்போல் உயர்த்திப் பிடித்துக்கொண்டு, நாங்கள் பல விஷயங்களைப் பற்றிப் பேசினோம். இதற்கு முன் என் நண்பர் ஆவியோடு எப்போதாவது பேசியதுண்டா என்று கீலர் கேட்டார். 'நேற்று மாலை காம்பல் வீட்டில் நடந்த ஆவித் தோற்றக் கூட்டத்தில் எனது நண்பர் ஆவியைச் சில கேள்விகள் கேட்டேன். அதற்கு மறுபடியாக, "ஜோகன்" என்று நீலவர்ணப் பென்சிலால் எழுதப்பெற்ற ஒரு காகிதம் பெற்றேன். வேறொன்றும் கிடைக்கவில்லை' என்றேன். உடனே சில நிமிஷங்களில், கீலர் கற்பலகைகளை மேசைமீது வைத்து மேலிருக்கும் பலகையின் ஒரு மூலையில் 'ஜோகன் இங்கே இருக்கிறார்' என்று

ஒரு பென்சில் துண்டால் எழுதினர். பின் என்னைப் படிக்கச்சொன்னர். படித்துவிட்டுப் பெயர் சரி தான் என்றேன். திரும்பவும் முன்போல் கற் பலகைகளைப் பிடிக்கச்சொல்லி இருவரும் உயர்த் திப்பிடித்துக் கொண்டோம். பலகைகள் மேசைக்கு மேல் அரையடி அந்தரத்தில் உயர்ந்து தோன்ற, நாங்கள் இருவரும் நீட்டியகைகள் மடங்காது, இருந்த இடத்திலேயே இருந்தோம். உள்ளே, இரண்டு கற் பலகைகளுக்கும் நடுவே இருந்த பென்ஸில் துண்டு 'கிரிச் கிரிச்' என்று அசையும் ஓசை கேட்டது. 'பென்சிலின் ஓசை கேட்கிறதா' என்ருர் கீலர். 'ஆம்' என்றேன். இரண்டு செகண்டுகளில் நின்று விட்டது. பென்சில் அசையும்போது மின்சாரம் பாய்ந்தது போன்ற ஓர் உணர்ச்சி எனக்கு உண்டாகியது. தனக்கும் சிறிதளவில் அப்படிப் பட்டதென்ருர் கீலர். கற்பலகைகளைத் திறந்தோம். பின்வரும் வாசகம் தெளிவான கையெழுத்தில் (ஆங்கிலத்தில்) எழுதப்பட்டிருந்தது:

'இவருடைய கேள்விகளுக்கு விடை சொல்லக் கூடியஎவரையும் எனக்கு இங்கு காணமுடியவில்லை- ஜி. ஸி.' ஜி. ஸி. என்பவர் யார் என்று கீலரைக் கேட்டேன். 'ஜி. ஸி. என்பதுதான் எனக்கு வழி காட்டியாக இருக்கும் ஆவி. அவர் முழுப் பெயர் ஜார்ஜ் கிரிஸ்டி என்பதாகும்' என்ருர்.

கீலர் மனம் சோரவில்லை. 'தங்கள் நண்பர் நேற்று இருந்தார் என்கிறீர்கள். அப்படியானல் கட்டாயம் எழுதுவார்' என்று சொல்லி, கற்பலகை

களைத்துடைத்து விட்டு, முன் போல் பிடிக்கச் செய்தார். சில செகண்டுகள் சென்றன. மின்சாரம் பாய்வது போன்ற எழுச்சி முன் போல் ஏற்பட்டது. இடையே இருந்த பென்சில் அசைந்து எழுதும் ஓசை பிறந்தது. ஓசை நின்றதும் கற்பலகைகளைத் திறந்து பார்த்தோம். சமஸ்கிருதம், கிரீக்கு, ஆங்கிலம், வங்காளி என்ற நான்கு மொழிகளில் வாசகங்கள் எழுதப்பட்டிருந்தன. கீலருக்குப் பெரு வியப்பாகி விட்டது. சம்ஸ்கிருதமோ, கிரீக்கோ, வங்காளியோ அவருக்குத் தெரியாது. அது மட்டுமல்ல, அந்த ஊரிலே என்னைத் தவிர எவருக்கும் வங்காளியோ, வடமொழியோ தெரியவராது. மேலும் வங்காளிக் கையெழுத்து என் நண்பரான ஜோகன் (சுவாமி ஜோகானந்தா) உயிரோடிருந்த போது எழுதும் கையெழுத்தை ஒத்துமிருந்தது. எனககுப் பெரு வியப்பாக இருந்தது.

மனவாக்கிறந்த இந்த அற்புதத் தோற்றத்தை வருவித்த கீலருக்கு நான் நன்றி பாராட்டிவிட்டு ஆவி எழுதிய கற்பலகைகளைப் பிறருக்குக் காட்ட விரும்புவதால், அவற்றை எனக்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்டேன். கீலர், தாமும் இது காறும் இத்தகையதொரு தோற்றத்தைக் கண்டதில்லை யென்று வியந்து கற்பலகைகளை எழுத்தழியாது என்னிடம் கொடுத்தார். அவற்றைப் பெற்றுக்கொண்டு அவரிடம் விடைபெற்றுக் கொண்டேன். இவ்வாறாக ஆவித் தொடர்புக் காட்சி அன்று முடிவுற்றது."

நான் இங்கு ஒன்று குறிப்பிட வேண்டும். எனக்கோ என் நண்பருக்கோ கிரேக்கமொழிப் பயிற்சி இல்லை. ஆனால் மற்றொரு ஆவிக் காட்சியில் என் நண்பர் தம்மோடு ஒரு கிரேக்க தத்துவ ஞானியின் ஆவியை அழைத்து வந்ததாக எனக்கு அறிவிக்கப்பட்டது. இதை நான் முதலில் நம்பவில்லை; பிறகு அந்த வாக்கியங்களை நியூயார்க்கிலிருக்கும் கொலம்பியா பல்கலைக்கழகத்து ஒரு பேராசிரியரிடம் காட்டின பொழுது, அந்த வாக்கியங்கள் பிளாட்டோ என்ற கிரேக்க தத்துவ ஞானியின் புகழ் பெற்ற வாக்கியங்களென்றும் ஒவ்வொரு சொல்லும் பிழையின்றித் திருந்த எழுதப்பட்டிருக்கின்றதென்றும் விளக்கினார். பிறகு அதன் பொருளை எனக்கு மொழிபெயர்த்துச் சொன்னார்.

மற்றொரு ஆவிக் காட்சியின் பொழுது ஜோகன் உருவம் தெரியவேண்டு மென்று விரும்பினேன். தனக்கு அது விருப்பமில்லை என்று அவர் மறுமொழி தெரிவித்தார். ஆனால் நியூயார்க் ராஜ்யத்தில், லிலிடேல் என்ற ஊரில் மாஸ் என்ற அம்மையார் வீட்டில் நடந்த ஆவிக்காட்சியில் என் நண்பரும் கல்கத்தாவில், ர்ரமகந்தோபோஸ் தெருவில், 57-ஆம் நம்பர் வீட்டில் வாழ்ந்தவருமான பாபு பலராம் பர்சு என்பவர் ஆவி முழு உருவம்பெற்று விளங்கியதைக் கண்டேன். உயிரோடிருக்கையில் அணிந்திருக்கும் வெள்ளைத் தலைப்பாகையே ஆவி உருவத்திலும் தோன்றியது. ஆனால் சிறு மின்சார பல்புகள் தலைப்பாகையைச் சுற்றிலும் மறைந்து

நின்று ஒளிவிட்டது போலத் தோன்றியது. நீண்ட தாடியோடு கம்பீரத் தோற்றம்தரப் பொலிந்து தோன்றிய உருவம் என் கண்களைக் கொள்ளை கொண்டது. தன் வலக்கையை நீட்டி மௌனியாய் என்னை வாழ்த்தினர். ஆவி மேவப்பெற்ற மாஸ் அம்மையார் பிரக்ஞை அற்று, நாற்காலியில் அமர்ந் திருந்தார். என்னை ஆசீர்வதித்ததும், பலராம் பாபு வின் உருவம் ஒரு வகையான புகைப்படலம் போன்ற பொருளாய்க் கரைந்து மறைந்தது. பல ராம் பாசு ஏன் என்னிடம் ஒரு வார்த்தை பேசலா காதென்று வருத்தமுற்றேன். அதைக் கேட்டதற்கு அவர் இறப்பதற்குப் பல நாட்களுக்கு முன் வரை யிலும் பேச முடியாத நிலையிலிருந்தாரென்றும், எனவே இறந்தபின் அவர் ஆவிக்குப் பேசும் ஆற்றல் இல்லையென்றும் விடை வந்தது. பலராம் பாபு இரட்டை நிமோனியா சுரத்தால் இறந்தா ரென்றும், அவர் இறப்பதற்கு ஒரு வாரத்துக்கு முன்னேயே பேசுவது நின்று விட்டதென்றும் பின்னர்த் தெரிந்து கொண்டேன்.

மற்றொரு ஆவிக் காட்சியில், ஜோகன் வங்காளியில் பேசக் கேட்டேன். தக்ர ஒலிப் பெருக்கிவழி பேசுவது போலிருந்தது. ‘இந்தத் தேசம் (அமெரிக்கா) உனக்குப் பிடித்திருக்கிறதா’? என்றார். ‘ஆம்’ என்றேன். ‘எனக்குப் பிடிக்க வில்லை. நம் அன்னையாரை (சாரதா தேவியாரை) பார்க்க இந்தியா செல்கிறேன்’ என்றார். அவர் உயிருள்ள காலமெல்லாம் அன்னையாருக்கு நீங்காத

தொண்டு செய்வதையே வாழ்க்கையின் உறுதிப் பயனாகக் கொண்டு வந்தார்.

இவை தவிரவும், கட்புலனாக ஆவியின் கைகள், உருவச்சித்திரங்கள் வரைவதை என் கண்ணால் அமெரிக்காவில் கண்டிருக்கிறேன்."

ஆயினும் அமெரிக்காவிலுள்ள மாயவித்தைக் காரனான ஹௌடினி, ஆவிக் காட்சிகள் அனைத்துமே பெருஏமாற்றம் என்று சொல்லிச் சண்டமாருத எதிர்ப்பிரசாரம் செய்வானேன்? ஹௌடினியைப்பற்றி ஆராயவந்தவரும், ஆவிஉலகத்தில் பெரு நம்பிக்கை கொண்டிருந்தவரும், புகழோங்கிய எழுத்தாளருமாகிய கானன்டாயில் என்பவர், ஹௌடினி பெரிய விளம்பர வெறி பிடித்தவன்; அன்று ஆவி உலகத்தைப் பற்றிய நம்பிக்கை விரைவாகப் பரவிக்கொண்டிருந்தது; எனவே அதை எதிர்த்தாலேயே அதிக விளம்பரம் கிடைக்குமென்று கருதி அவ்வாறு செய்தான். உண்மையில் அவனை இயக்கியதே ஏதோ ஒரு நுட்ப ஆற்றல்தான்; அவன் இளமையில் ஐராடேவன்போர்ட்டு என்ற ஆவி மேவுவோனிடம் நெருங்கிய உறவு கொண்டிருந்தான்; எத்தனையோ ஆவி மேவுவோரை ஹௌடினி எதிர்த்திருக்கிறான்; இந்த டேவன்போர்ட்டு சகோதரர்களை மட்டும் எதிர்த்ததில்லை. அவர்கள் செய்வன மட்டும் மெய்யானவையென்று சொல்லியிருக்கிறான். இதிலிருந்து, தானே ஆவிகளின் ஆற்றலால் வாழ்ந்தவன்; அதைப் பிறருக்குத் தெரிவிக்க

விருப்பமில்லாமல், மற்றைய ஆவி மேவுவோர் மேல் அவநம்பிக்கை ஏற்படச் செய்தான்—என்றெல்லாம் கானன்டாயில் விளக்கங் காண முயல்கிறார்.

உண்மையில் ஹௌடினிக்குத் தன் அற்புத ஆற்றலின் மர்மம் தெரியவராதென்பதே என் விளக்கம். எவரிடமும் அவன் அதைக் கற்கவில்லை. எந்த யோக நெறியும் பயிலவில்லை. ஆயினும் ஏதோ ஓர் ஆற்றல் தனக்குப் பிறந்திருப்பதை உணர்ந்தான். எனவே விளக்கங் காணாது ஆற்றல் வந்த ஒருவன், ஆவி யென்றும், அருவம் என்றும் விளக்கங்கூறி வந்த ஆற்றலில் நம்பிக்கை இல்லாதவனாய் இருந்தான். ஒரே வழியில்தான் அற்புத ஆற்றல் வரும். அது எப்படி யென்றால், தன்னை அறியாத நிலையில். அதுதான் தனக்கு வந்தது; தான் அறிந்தது. அப்படியிருக்க ஆவி என்று சொல்லிவருவது சாலவித்தைகளில் ஒன்றாகத்தான் இருக்கவேண்டும் என்று அவன் முழுமனதோடு எண்ணினான் என்பதே என் விளக்கம்.

என் முடிவுக்கு ஆதாரமென்ன இருக்கிறது? தன்னையறியாத அசாதாரண ஆற்றலொன்று ஒருவனுக்குப் பிறக்குமா? கல்லாத விச்சை யொன்றுண்டா?

தந்திரஞ் சொல்வார், தம்மையறியார்;
　　தனி மந்திரஞ் சொல்வார், பொருளையறியார்;
மந்திரஞ் செபிப்பார்கள் வட்ட வீட்டினுள்
　　மதிலினைச் சுற்றுவார், வாயில் காணார்

அந்தரஞ் சென்றுமே வேர் பிடுங்கி
அருளென்னும் ஞானத்தால் உண்டை சேர்த்தே
இந்த மருந்தினைத் தின்பாராகில்
இனிப் பிறப்பில்லை யென்றாடு பாம்பே.

— பாம்பாட்டிச் சித்தர் பாடல்

# திபெத்

திபெத் நாடு: "உலகம் என்னும் ஒளிமணி வல்லிமேல் வளரும் வெண்மலர்" எனச் சேக்கிழார் வருணித்த இமயமால்வரைப் பாங்கருள்ளது. நில மடந்தையின் எழில் மாளிகைக்கு நடுக்கூரை எனப் படுவது. ஆசியா கண்டத்தின் இதயமாய், இயற்கை அன்னையின் எட்டா அரணாய், ஐம்பதுகோடிமக்கள் தொகை கொண்ட, சீனத்துக்கும் நாற்பதுகோடி கொண்ட பாரதத்துக்கும், இருபதுகோடி கொண்ட ரஷ்யாவுக்கும் நடுவே கடல் மட்டத்துக்கு பதினெண்ணாயிரம் பத்தொன்பதாயிரம் அடி உயரத்திலே, ஆயிரத்தி ஐநூறுமைல் நீண்டு, நீங்காத பனி போர்த்த தாழ்வரைகளைக் கொண்டு இலங்குவது. புற உலகுக்கெட்டா மெய்ஞ்ஞானம் கிட்டப் பெற்றது. சாந்தத்தில் தோய்ந்தது. கர்மவினையில் மூழ்கியது. சாத்வீகத்தில் செயலற்றுக் கிடந்தது. "ஓம் மணி பத்மே ஓம்" என்று நீங்காது புத்த பகவான் திருநாமத்தை முழங்கும் நான்கு லட்சம் துறவியரைக் கொண்டது. ஐயாயிரம் மட ஸ்தாபனங்கள் நிறைந்தது. மக்கள் தொகையில் மூவருள் அறத் துறவியராய் மண்டப்பெற்றது. மத ஆட்சி ஓங்க நின்றது. மகளிர்க்கு வரையற்ற உரிமை வழங்கக் கொடுத்தது.

ஆதி மனிதன் குரங்கின் வழித்தோன்றலென்ப தைப் பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியில்

டார்வின் ஆராய்ந்து கண்டு விட்டதாக மேலை நாட்டு விஞ்ஞானம் மெச்சிக் கொள்கிறது. பல்லா யிரம் ஆண்டுகளுக்கு முன்னே திபெத்தியர் இதைக் கண்டு விட்டனர். இந்தியாவிலிருந்து வாழ்வை நாடிச்சென்ற ஒரு குரங்கு, இமயத்தின் மறுபுறத்து வாழ்வின்பம் அறியாது தன்னந் தனியளாய் அலைந்து திரிந்த ஒரு வல்லரக்கியை நேர்பட்டது. இந்தக் குரங்குஆதாமுக்கும் அரக்கி ஏவாளுக்கும் பிறந்த மகவே ஆதி திபெத்தியன்.

பல்லாயிரம் ஆண்டுகள் சென்றன. மனித சமூகங்கள் உலகத்தின் வெவ்வேறு பாகங்களில் நாகரீகத்தின் விடியற்பொழுதில் எவ்வாறிருந் தனவோ அவ்வாறே திபெத்தியரும் பல நூற்றாண்டு கள் இருந்தனர். பேயென்றும், பூதமென்றும், பிசா சென்றும் பில்லி சூன்யமென்றும், மந்திரமென்றும் தந்திரமென்றும் இயற்கைச் சக்திகளுக்கெல்லாம் அஞ்சி நடுங்கி அஞ்சலி செய்து வந்தனர். மந்திர வாதிகளே மதக்குருக்கள் ; மதக் குருக்களே சமூகத் தலைவர்கள் ; மா மன்னர்கள். முல்லை, குறிஞ்சி நில மாக்களின் இயல்பான வீரம் கொண்டு, வேடுவ ராயும் கன்றுகாலி நிரை மேய்ப்பவராயும் பக்கத்து சீன சாம்ராஜ்யத்துள் அடிக்கடிப் பாய்ந்து கொள்ளை யும் கொலையும் விளைத்து வந்தனர். மேலைக் கண வாய் வழிப் புகுந்த ஆரியர் வேத சமயமோ, அதற்கு முன்னே வாழ்ந்த அரப்பா மூகஞ்சதாரோ திராவிட நாகரீகமோ அவரை அண்டியதாகக் காணோம். புற உலகு தொட்டறியா தனித் திபெத்திய வாழ்

வில் நாளைக் கழித்தனர். இந்த வாழ்வை, சமய நாகரீகத்தை- அல்லது அநாகரீகத்தை-'பொங்கிசம்' என்று ஆங்கிலத்தில் கூறுகின்றனர்.

கி. மு. ஆறும் நூற்றுண்டில் இமயத் தாழ் வரையில் கபிலவஸ்து நகரில் கோதம புத்தர் தோன்றினார். புத்தர் ஆரியனன்று; அன்றி ஆரிய சமய சமூக அடிப்படைகளைத் தகர்க்க முயன்ற முன்னே வாழ்ந்த திராவிட இனத்தவனுமன்று; திபெத்திலிருந்து இமயச்சாரலில் இறங்கிக் குடிபோந்த திபெத்தியமகன் என்று கருதுவதற்குப் பல சான்றுகளிருக்கின்றன. ஆயினும் அவர் போதனைகள் அன்றையத்திபெத்துக்குப்பயன்படவில்லை. முதலில் பௌத்தம் வட இந்தியாவிலேயே தலையெடுத்தது. பின்னர் தென்னிந்தியா, இலங்கை, பர்மா, சாவகம் சீனம், ஜப்பான் முதலிய தேசங்களுக்குப் பரவியது. பௌத்த சித்தாந்தத்தை உலகெல்லாம் பரப்புவதே தன் முதற்கடனுய்க் கொண்ட அறவாழி அண்ணல் அசோக மன்னன் காலத்துங்கூட, புத்தர் பிறந்த சமூகத்தினர் வாழ்ந்த திபெத்துள் அவர் கற்பனைகள் பரவியதாகத் தெரியவில்லை. இமாலய தேசங்களுக்கும் அசோகன் சமயத் தூதுவர்களைப் போக்கி வைத்தான் என்றிருப்பதே அல்லாது, திபெத்து தெளிவாகக் குறிப்பிடப் படவில்லை. புற உலகறியாத் தனி வாழ்வில், மாருப் பனிமலை அரண் செய்ய அன்றையத் திபெத் நரபலி வழங்கிய அநாகரீகத்தில் மூழ்கியிருந்தது.

அரண் செய்ய அன்றையத் திபேத்து நரபலி வழங்கிய அநாகரீகத்தில் மூழ்கியிருந்தது.

கி. பி. ஆறும் நூற்றாண்டுக்குள் பௌத்தம் தென்னாட்டில் வாழ்ந்து வளம்பெற்று, சைவத்துக்கு முன்னே தாழ்ந்தும் விட்டது. தென்னாட்டை இழந்த பௌத்தத்தைத் தன் இனத் தலைவன் தாய்நாடான திபேத்து வரவேற்றது. ஸாங்-ஸென்-காம்போ அல்லது நெடிய - வலிய - ஆழ்ந்தவன் என்ற திபேத்திய அரசன் ஏழாம் நூற்றாண்டின் முற்பகுதியில் பர்மாவின் வட பாகத்தையும், சீனாவின் பெரும் பாகத்தையும் தாக்கி வாட்டினான். தோல்வியுற்ற தாய்சங் என்ற சீனமன்னன் நெடு-வலி-ஆழ்ந்தானோடு சமாதானம் செய்து கொண்டான். சீனமன்னன் மகள் திபெத்திய வெற்றிக்குத் திறையாய் மன்னன் நெடு வலி-ஆழ்ந்தான் இரண்டாம் தேவியானாள். முதல் தேவி நேப்பாளத்து மகள்.

மங்கையர் இருவரும் பௌத்த சமயத்தினர். மன்னன் மனத்தை மாற்றினர்; மதியை மாற்றினர்; மதத்தை மாற்றினர். திபேத்தின்வாழ்வை, கலையை, நாகரீகத்தை மாற்றினர். ஆன்மபலன் மிகுந்த அறத் துறவியர்க்கும் செய்தற்கு அரிய புரட்சிகரமான சமய சமூக மாற்றத்தை அழகியர் இருவர் வேல்விழிகள், வெண்ணகைகள் செய்து முடித்தன. சரித்திரமெங்கணும் அழகின் இந்த அற்புத சக்திக்குச் சான்றுகள் மலிந்து கிடக்கின்றன.

உலக வாழ்வின் வளப்பாட்டுக்கு வேண்டியனவெல்லாம் சீனத்திருந்து வந்தன. சீனக்கலை, சீன

ஆசாரம், சீனப் பழக்க வழக்கங்கள், சீனப்பண் பாடு-யாவும் :திபேத்துள் மெல்லப் புகுந்து புது வாழ்வை உருப்படுத்தின. ஆன்மவாழ்வின் மேம் பாட்டுக்கு வேண்டியன வெல்லாம் பாரதத்திருந்து வந்தன. பௌத்த குருக்கள், போதகர்கள், வட மொழி நூற்கள், அன்று திருந்தி அமைந்து வந்த வட மொழி லிபி-யாவும் இந்தியாவிலிருந்து திபேத் துள் கலந்து புதுச்சமயத்தைச் செப்பனிட்டன. இன் றையச் சீனர் பலர் இதையுணராது சீனமொன்றே திபேத்தைத் திருத்தியதாகப் பெருமை கொள்கின்ற னர். வெற்றிக்குத் திறையாய் வந்த சீன மங்கைக்கு முன்னேயே, வதுவைச் சடங்கால் வாய்த்த பாரத மங்கை, உரிமையால், முதலிடம் பெற்றுவிட்டாள்.

நெடு-வலி-ஆழ்ந்தான் தான் செய்தது என்ன வாய் முடியுமென்று கண்டானு? பௌத்த மதப் போதனையால் விரைவில் திபேத்தியர் வீரமறம் நலிந் தது. தேசம் சாத்வீகத்தைத்தழுவி, சமய வாழ்வில் அழுந்தியது. அவன் பின்னேவந்தஅரசன்பௌத்த மதத்தை வலுவடையச் செய்தான். பத்மசம்பவர் என்ற பௌத்த ஞானியை இந்தியாவிலிருந்து அழைத்துச்சென்று பௌத்தமடங்களைநிறுவினன். முன்னே இருந்த பொங்கி மதத்துக்கும் பின்னே வந்தபௌத்தமதத்துக்கும் இணைப்புக்கண்டு பௌத் ததுறவிகளான லாமாக்கள் மார்க்கத்தை உருவாக் கினன். மகாயான பௌத்தத்தின் கண் போன்ற ஒரு உறுப்பாயிருக்கும் லாமாக்கள் மார்க்கம் அன் றுதான் திறக்கப்பட்டது. நாளடைவில் லாமாக்கள்

செல்வாக்குமிருந்தது. ஆத்மீகத்துறையிலிருந்துதுற விகள் அரசியல் துறையில் கால்நீட்டினர்கள். மக்கள் மனத்தை, வாழ்வை, இரண்டறப் பிணிக்கும் சமய நம்பிக்கைகளின் பெருவலியால் அரசர்க்குப்போட் டியாகி, விரைவில் பெரும்படைகள் திரட்டி அர சரை அடிமை கொண்டனர். ஆண்டிகள் அரச ராயினர். அரசர்கள் ஆண்டியாயினர். பௌத்தத் தைப் புகுத்த விழைந்த நெடு-வலி- ஆழ்ந்தான் தன் குலத்துக்கே, அரசமரபுக்கே, தான் குழி தோண்டி விட்டதை உணர்ந்தானு? ஒட்டகத்துக்கு இடங் கொடுத்த அரபியின் கதையை அறிந்தானு?

அரசியலுக்கும் ஆத்மீகத்துக்கும், துறவிக்கும் வேந்தனுக்கும் ஏற்பட்ட பூசல் மிகத் தொன்மை யானது. சிறுகிய பழைய சமூகங்களிலே இது மந்தர வாதிக்களுகும் சாதித் தலைவர்களுக்கும் ஏற்பட்ட பூச லாய் அமைந்தது. மந்திரவாதிகள் மக்கள் மனத் தின் மேல் ஆணை செலுத்தினர். சாதித் தலைவர்கள் அவர்கள் உடல் மேலும், உடைமை மேலும் ஆணை செலுத்தினர். மனத்தின் மேல் சென்ற ஆணை ஆழ்ந்ததாய் எளிதில் அழிக்க இயலாததாய்அடிப் படையாய் அமைந்தது. நாளடைவில் உடலும் உடைமையும் அதற்கு உரியவாயின.

ஆனல் வெற்றி ஒருவழியாகவே இருந்ததில்லை. சில வேளை மனம் வென்றது; சிலவேளை மறம் வென் றது. சிலகாலம் மந்திரவாதம் வென்றது. சிலகாலம் புயவலிமை வென்றது. அடிக்கடி எழும் இந்தப்

பூசலை நிறுத்த ஒருவகையான ஒற்றுமைநெறி கை யாளப்பட்டது: அரசனே ஆச்சாரியனுமாயமைவது; மந்திரவாதியே மன்னனுமாய் ஆள்வது. இந்தச் சமரசத்துட் பிறந்ததுதான் "அரசன் தெய்வத்தின் அம்சம்" "கடவுளின் பிரதிநிதி" "திருவுடைமன் னனைக் காணில் திருமாலைக் கண்டேன் என்னும்" என்ற கோட்பாடுகள்.

இந்தியச் சரித்திரத்திலே பிராமண க்ஷத்திரி யப்போட்டி உபநிஷத்தில் பலவிடங்களிற் காணப் படுகிறது. விசுவாமித்திரர் வாழ்க்கை வரலாற்றை இதை நன்ருய் எடுத்துக்காட்டும் அன்றைய ஒரு சரித் திர நிகழ்ச்சி எனவே கொள்ளவேண்டும். க்ஷத் திரியத் தலைவர்களான புத்தரும், சைனரும் பிரா மணமதத்தை எதிர்த்துத் தனி மதங்கள் நிறுவமுயன் றதும் இந்தப் போராட்டத்தின் விளைவே என்று ஆராய்ச்சி கூறும். ஆனல் அரசர்களெல்லாம் புத்தர் களல்ல; மகாவீரர்களல்ல; அன்றிச் சனகர்களல்ல; அசோகர்களல்ல. அரசியல் துறையில் ஆழ்ந்துபட்ட வர்களுக்கெல்லாம் ஆத்மீகத்துறையில் வெற்றியை நிலைநாட்டுவது அரிதாகிவிட்டது. எனவே வேறு வகையில் சமரசம் நிகழ்ந்தது: அரசர்கள் ஆண்டி களாக முயல்வதில்லை; ஆண்டிகளும் அரசராக முயல்வதில்லை. அரசர்கள் அரசாய் ஆள்வது; ஆனல் ஆண்டிகள் ஆணைப்படி ஆள்வது. தென்னட்டுச் சரித் திரத்திலே பீஷ்வாக்கள் ஆட்சிக்காலம் வரை இந்த முறையே நிலைத்து நின்றது. மாணிக்கவாசகர், திரு ஞானசம்பந்தர், வித்யாரண்யர், இராமதாசர் முதலி

யோரெல்லாம் ஆண்டிகளாயிருந்து அரசரை ஆண்ட பெரியவர்கள்.

அரசியலுக்கும் சமயத்துக்கும் ஐரோப்பாவில் நெடுங்காலம்போராட்டம் நடந்தது. விண் படைத்த பொருள்களுக்கெல்லாம் தனித்தலைவர் என்ற போப்பாண்டவர் மண் படைத்த பொருள்களுக்கெல்லாமும் தலைமைகோரினர். ஐரோப்பிய மணிமுடிகள் எல்லாம் உரோமாபுரியின் தெய்வீகத் திருவடிகட்குக்கு வணக்கம் செலுத்தின. அரசியலும் சமயமும் இரண்டறக் கலந்து இயங்கியகாலம் வரை உரோமாபுரியின் கிருஸ்துவம் தனிநீக்கிப் பொது ஆட்சி செலுத்தியது. ஆண்டி சொற்படி அரசன் நடந்தான். ஆண்டிகளுக்காண்டி அரசனுக்கரசனுமாயிருந்தான்.

இரண்டு சக்திகள் இந்தச் சமரசத்தைக் குலைத்தன: ஒன்றுதேசீயம். இந்தத் தேசீய உணர்ச்சிக்கு அடிப்படையாயிருந்தது உரிமை வேட்கை. இரு அரசர்களிடையே கலாம் நிகழ்ந்த போது இருவரும் தத்தம் விருப்பப்படி நடக்க விழைந்தனர். தமது தேசம் உரோமாபுரியின் கட்டளைக்குட்பட்டுநடப்பது சுதந்திர உணர்ச்சிக்கு மாறுபட்டது என்று அரசர்கள் முரணலாயினர். சுதந்திர உணர்ச்சிக்கு முரணனதென்றதுமே நாட்டுமக்கள் ஆதரவும் பிறந்தது. பெரும்பாலான மக்கள் இருதலைக்கொள்ளி எறும்பாய்ச் சமயத்துக்கும் சுதந்திரத்துக்குமிடையே தத்தளித்தனர். இந்தக் காலத்தில்தான் சம

யத்திலேயும் சுதந்திரம் புகுந்தது. இதுதான் சமய அரசியல் இணைப்பைக் குலைக்கவந்த மாபெரும் இரண்டாம் சக்தி. ஆத்மீகத்துறையில் போப் பாண்டவர் கொண்ட தனி நாயகத்தை ஆராய மதச் சீர்திருத்த வாதிகள் முன்வந்தனர். அவருக்கு அந்த உரிமையை அளித்த கத்தோலிக் மார்க்கத்தையும் அதன் அடிப்படைநூலான பழைய ஏற்பாட்டையும் மறுத்தனர். பிராட்டஸ்டன்று என்ற கிருஸ்துவமத மறுப்பியக்கம் பிறந்தது.

புத்தரும் மகா வீரரும் தாம் ஐரோப்பிய மத மறுப்பியக்கம் தோன்றுமுன் வைதீக மத மறுப்பியக்கம் தோற்றினர்கள். ஆயினும் அவர்கள் தேசீயத்தோடும், சுதந்திரத்தோடும் அதை இணைத்தாரில்லை. அவர்கள் இயக்கம் சமயத்துறையில் அனைவருக்கும் சுதந்திரத்தை வேண்டவில்லை. அரசியல் துறையிலும் சுதந்திரத்தை வேண்டியது. இந்த வேற்றுமையின் பயனாய் இந்தியாவில் அரசியலில் ஒரு சமயம் போய் மற்றொரு சமயத்தின் ஆதிக்கம் வலுத்ததே தவிர, ஐரோப்பாவிற் போல் அரசியலில் சமயத்தின் ஆதிக்கமே குறையும் வழி எழவில்லை.

சமயமும் அரசியலும் வேருய்ப் பிரிந்ததே ஐரோப்பாவில் பதினைந்தாம் நூற்றாண்டு நிகழ்ந்த அடிப்படையான நிகழ்ச்சி. இந்தப் பிரிவினை நிகழ்ந்த பின் இரண்டும் வேறு வேறு வழிகள் சென்றன. சுதந்திரம் என்பது இரண்டுக்கும் பொதுவாகி விட்டது. ஆனல் அரசியலில் முதலில்

தேசீயம் என்ற பெயரால் அரசர்கள் இந்தச் சுதந்திரம் தமக்கும் தமது வம்சத்தினர்க்கும், உற்ரூர் உறவினருக்கும் வந்த சுதந்திரமென்றே கருதி நடக்கலானுர். இந்த எதேச்சாதிகாரம் நெடுநாள் நிற்கவில்லை. தேச சுதந்திரம் என்பது மக்கள் சுதந்திரம் என்ற விரிவடைந்து, ஜனநாயகம் என்ற புதுமுறையில் வெகுவேகமாகப் பரவியது. இங்கிலாந்தில் சார்லஸ் மன்னன் தலை இழந்தான். பிரான்சில் புரட்சி தோன்றி, சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்ற விளிகள் கேட்கலாயின.

அரசியல் ஆதிக்கம் குறைய, சமயம் தனிவாழ்வு வாழ்ந்ததென்ருலும், சுதந்திர விதைக்கு விஞ்ஞானப் புதுவெள்ளம் பாய, அதுவும் பெருமாறுதல்களைக் கண்டது. பகுத்தறிவு இயக்கம் பதினெட்டாம் நூற்ருண்டு இறுதி தொடங்கி விரைவாய்ப் பரவியது. ஆயினும் பொருளாதாரத் துறையில் சமூகக் கட்டுப்பாட்டைக் குலையாமல் காக்க, முதலாளி வருக்கத்தார் சமயத்தைப் பயன் படுத்தி வந்தனர். நிலப்பிரபுத்துவப் பொருளாதார அமைப்புக்குப் பழைய கத்தோலிக் சமயம் ஆதரவளித்து நின்றது. பிராட்டஸ்டன்று இயக்கம் தோன்ற அந்தப் பொருளாதார முறை அழிந்தது. வியாபாரப் புரட்சிக்கும், அதன் பின்னே வந்த முதலாளித்துவப் பொருளாதாரத்துக்கும் புதுச் சுதந்திரசமயமான பிராட்டஸ்டன்று மதம் ஆதரவாயிருந்தது. எனவே அதுவும் அழிந்தால்தான் முத

லாளித்துவப் பொருளாதாரத்தையும் அழிக்கமுடியும்- இப்படியாகக் கருதினர் கார்ல் மார்க்ஸ். சமயம் ஒரு மயக்கப் பொருள். அது எந்த வகையிலிருந்தாலும், அழிந்தால்தான் பொருளாதார சுதந்திரம் என்றார்.

ஆனல் கார்ல்மார்க்ஸ் மனோதத்துவ உண்மையை நன்ருயறிந்தவரோ என்று ஐயுற வேண்டியிருக்கிறது. அரசியல் சுதந்திரத்துக்காகப் பழைய சமயம் வேண்டாமென்றார்கள். அரசியல் சுதந்திரம் வந்தது. புதுச் சமயம் பொருளாதாரத்தைப் பிடித்துக்கொண்டது. புதுச் சமயத்தையும் விரட்டி விட்டால் பொருளாதாரச் சுதந்திரமும் வந்து விடலாம். ஆனல் சமூக மனத்தில் ஒரு வெட்டவெளி தோன்றும். அரசியல் சமத்துவமோ, பொருளாதார சமத்துவமோ அந்தச் சூனிய வெளியை நிரப்ப வல்லனவா? வல்லதாகில், ஸ்டாலின் ஏன் லெனின் பிணத்தைப் பதஞ்செய்து மக்களை வணங்கச்செய்தார்? தன் உருவப் படத்தை எங்கும் நிறுத்தி வைத்துப் பாமரரைப் பணியச்செய்து வந்தார்? பழைய தெய்வங்கள் போய்ப்புதுத் தெய்வங்கள் வருகின்றன.

எய்வகைசார் மதங்களிலே பொய்வகைச் சாத்திரங்கள்
எடுத்துரைத்தே யெமதுதெய்வ மெமது தெய்வமென்று
கைவகையே கதறுகின்றீர் தெய்வமொன்று என்று அறியீர்
கரிபிடித்துக் கலகமிட்ட பெரியரினும் பெரியீர்
ஐவகைய பூதவுடம் பழிந்திடிலென் புரிவீர்
அழியுடம்பை யழியாமையாக்கும் வகையறியீர்
உய்வகையென் றனித்தந்தை வருகின்ற தருணம்
உற்றறிவ னுற்றிடுவீர் பெற்றிடுவீ ருவப்பே.

# வசந்தன் வருகை

இந்தப் புத்தாண்டு நன்னாளிலே அனைவருக்கும் அன்பின் வாழ்த்து. தமிழகத்திலே, உலகிலே, அண்டத்திலே, பேரண்டத்திலே, விண் மீன்கள் கொத்துக் கொத்தாய் முல்லை மலர் போன்று பூத்து விளங்கும் பால் வீதியிலே, ஆதி அந்தமில்லாக் கால ஒழுக்கிலே, தோற்றமும் இறுதியுமில்லா வெட்டவெளிப் பரப்பிலே, எங்கும் எங்கும், இன்பம் பெருகுவதாக. அன்பு பெருகுவதாக. அறம் பயில்வ தாக. பசியும் பிணியும் நலிவதாக. வசியும் வளனும் சுரப்பதாக. தமிழ் நாட்டிலே, தலைவருள்ளே, தொண் டருள்ளே, வேற்றுமை அகன்று, ஒற்றுமை வளர்ந்து, மறம் மடிந்து, அறம் சிறந்து ஒழுக்கப் பேரரசு பிறப் பதாக; காயும் கனியும் கணக்கின்றிப் பொலிக. கலை மலிக; விலை குறைக. தொழில் செழிக்க. சோம்பல் துயர் கெடுக. அஞ்ஞான மகல, ஞானமும் விஞ்ஞா னமும் உயர்க. நல்லவை யாவும் பல்கி, அல்லவை யாவும் அருகி, உயிரனைத்தும், உடலனைத்தும், உலக னைத்தும் வாழ்க, வாழ்க, வாழ்க.

வசந்தன் உலா வருகின்றான். தென்றல் தேர் மெல்ல ஊர்ந்து வருகின்றது. கருணை வடிவாம் மழைத்திவலைகள், வாழ்க்கைக் கவலை எழுப்பிய நெடுநாளைய வெப்பத்தை, தன்னலம் எடுத்த பெருந்தூசிப் படலத்தை, மெல்ல மெல்லத் தணிக்க வருகின்றன. பறவைகள் இன்ப இசை கூட்டு கின்றன. வண்டுகள் பல்லாண்டுபாட, குயில்கள்

எக்காளம் முழங்க, பவனி வருகிருன் என்பார் கவிஞர்.

"வசந்தனே விரைந்துவா. உன் கருணையாம் மழையைப் பொழிந்து தா. பயிர் பச்சைகளைச் செழிக்கச் செய். கன்று காலிகளைப் பல்க வை. கட்டுப்பாடுகளைக் கழற்றத் துணைபுரி. பாறிய நெஞ்சிலே அன்பையும் அருளையும் தளிர்க்கச் செய் 'இந்திரர் அமிழ்தம் இயைவதாயினும் இனிதெனத் தமியர் உண்டலும் இலரே' என்ற ஆக்க மக்களாய் எங்களை மீண்டும் ஆக்கு." இவ்வாருக எண்ணமிட்டு இரவு கண்ணயர்ந்தேன்.

வசந்தன் வந்தான்; வந்தவன் சொல்வான்: "நான் செய்கிறேன். இந்த ஆண்டு பெருமழை பொழிவிக்கிறேன்.

"மழை வந்திடில் மற்றதையெல்லாம் மறந்து விடுவார்கள் என்று மக்கள் உறுதியாக நம்புகிருர்கள்."

மேலும் சொல்வான் வசந்தன்: "மகனே மழை இல்லை என்று என்னைக் குறை கூறுகிருய். உன்னையே கூறிக்கொள்ள நினைத்தாயில்லையே. 'ஏதிலார் குற்றம்போல் தன் குற்றம் காண்கிற்பின் தீதுண்டோ மன்னுமுயிர்க்கு', என்பதன்ருே உங்கள் ஆசிரியர் வள்ளுவர் படிப்பினை?

"தனித்திருந்து குறளைப் போது. ஓதியவாறே ஒழுக ஒருப்படு. உன் கண்ணில் உத்திரத்தை வைத்துக் கொண்டு அவன் கண்ணின் துரும்பைக் குற்ற

கூறுகிறாய். மழை பொழியாததற்கு நீயே பொறுப்பு. உன் நெஞ்சில் மழை இல்லை; உலகப் பரப்பில் மழையை எதிர்பார்க்க உனக்கு எவ்வாறு உரிமையுண்டு? மழை என்பது என்ன என்று உனக்குத் தெரியுமா? கருணையின் திரட்சி. தனி உயிர்களின் உள்ளங்களில் கருணை உண்டேல், அனைத்துயிருக்கும் அது மழையாய்த் திரண்டு பொழிகின்றது. உன்னையன்றி உலகமில்லை. உன் தனி அறமின்றி உலக அறமில்லை. சிற்றியற்கை வழியே பேரியற்கை நெகிழ்கின்றது. அகமே புறம்.''

"வசந்த தேவா, உன்னை வணங்குகின்றேன். நீ பெரியவன். எதிர்த்துப் பேச அஞ்சுகிறேன். ஆனால் ஐயப்பாடு எழுகின்றது. ஏதோ ஆத்மீகத் தத்துவத்தை விளக்கி என்னை ஏமாற்றப்பார்க்கின்றாய். நாடோடிகள் பாடும் விவேக சிந்தாமணிப் பாட்டுக்கும் உன் தத்துவ விளக்கத்துக்கும் வேற்றுமை தெரியவில்லையே. கருங்கடலிலிருந்து கதிரோன் வெப்பத்தால் நீராவி கிளர்ந்து, கார் எழிலாகத்தடிந்து, சூல்கொண்டுலாவி, மென்காற்றுப் புல்ல அன்றோ மழை பொழிகின்றது? இதற்கும் மனிதன் உள்ளத்துக் கருணைக்கும் என்ன தொடர்பு? பழைய குருட்டு வேதாந்தங்களால் என்னை மயக்க வைக்காமல் விஞ்ஞானத்தால் விளக்க முடியுமானால் விளக்கு.''

வசந்ததேவன் சிரித்துக்கொண்டு சொல்வான்: "அப்பனே விஞ்ஞானி! பொறு. பதட்டம் வேண்

783
O 31:6
...ERSITY EXTENSION LIB...

டாம். நீ மேதை, விஞ்ஞானம் தெரிந்தவன். விஞ்ஞானகாலத்து வாழ்கிறவன். உனக்கு விஞ்ஞானத்தாலேயே விளக்குகிறேன். விஞ்ஞானம்வேறு, ஞானம் வேறென்றிருக்கின்றாய். இந்த வேறுபாட்டினால்தான் உலகில் இன்றையக் குழப்பங்களெல்லாம். விஞ்ஞான வளர்ச்சியால் நீ புறஉலகிலே எல்லையற்ற இன்பங்களைப் பெற்றுக்கொண்டிருக்கிறாய். காற்றிலே பறக்கின்றாய்; நீரிலே மூழ்குகின்றாய். நிலத்திலே கடுகி விரைகின்றாய். மின் விளக்கு எரிக்கின்றாய்; மின்விசிறியிற் குளிர்கின்றாய். ஒலி அலைகளை உன் பள்ளிக்கறையிலே ஈர்த்து, வானொலியின்பத்தை நுகர்கின்றாய். வானவெளி கடந்து, காண்கின்றாய்; பேசுகின்றாய்; கேட்கின்றாய். இவையனைத்தும் உன் விஞ்ஞானம் கண்ட அற்புதங்கள். ஆனாலும் மகனே, உன்னை நீ யாரென்று அறிந்து கொள்ளவில்லையே. கண்ணிருந்தும் குருடனாய் வாழ்கின்றாயே. பெருநிதியம் படைத்தும் மிடியனாகவே வாழும் உலுத்தனாக இருக்கின்றாயே. உலகெலாம் அறிந்த நீ உன்னை அறிந்துகொள்ளவில்லையே. புறமெல்லாம் வென்றவன் அகமதைக் காணவில்லையே. மைந்தனே, நீ யார்? ஏன் பிறந்தோம், எதற்கிருக்கின்றோம்? எங்கிருந்து வந்தோம், எங்கு நோக்கிப் போகின்றோம்-என்பன போன்றவற்றுக்கு உன் விஞ்ஞானம் முடிவு கண்டதா? தகுதியான முடிபுகள் கண்டிருக்குமேல், அகத்தின் கருணைக்கும், புறத்தின் கருணையாம் மழைக்கும் நீ இணைப்பறியாது மயங்கி இருக்கவே மாட்டாய்.

"ஒரு கதை சொல்கிறேன் கேள். ஒருநாள் ஒரு பெரிய வானநூல் விஞ்ஞானி பட்டணத்துக்கு வந்தார். தபாலாபீசுக்கு வழி எப்படியென்று ஒரு சிறுவனைக் கேட்டார். சிறுவன் விளக்கமாக வழி சொன்னான். விஞ்ஞானி மகிழ்ந்து, 'தம்பீ நான் யார், தெரியுமா? வானநூல் நிபுணன். இன்று நகர சபை மண்டபத்தில் பெரிய சொற்பொழிவு நடத்துகிறேன். செவ்வாய் மண்டலத்துச்குப் போகும் வழி என்பதைப் பற்றிப் பேசுவேன். நீ கட்டாயம் வா' என்றார். அதற்குச் சிறுவன் சொல்வான் 'ஐயா, தபாலாபீசுக்கு வழி என்னிடம் கேட்டீர்களே, நீங்களா செவ்வாய் மண்டலத்துக்கு வழி காட்டுகிறவர்கள்?' விஞ்ஞானி வெட்கித்துச் சென்றார். மலடு கறந்து கைவருந்த வேண்டாம்."

"மேலும் சொல்லுகிறேன் கேள். நீ விஞ்ஞான முறையில் காரண காரியத்தொடர்பை நாடியிருக்கிறாய்; நான் ஞானமார்க்கத்தில் அதேதொடர்பை ஏற்றுக்கொண்டு விளக்குகிறேன். ஆழாழியின் நீர்த்திவலைகளுக்கும், விண்ணினின்று பொழியும் மழை நீர்த்துளிகளுக்கும் நீ எளிதில் தொடர்பு கண்டுவிட்டாய். இரண்டும் பருப்பொருள் வடிவினதாயிருக்கின்றன. எனவே தொடர்பு எளிதில் நிறுவினாய்; அது மட்டுமல்ல. காட்சி மாத்திரையிலும் சான்றிருக்கிறது. விஞ்ஞான அறையில், நீரை முகந்து ஆவியாக மாற்றி மீண்டும் குளிர்விக்க நீர்த்துளிகள் பெற்றுத்தேறுகிறாய். என்னுடைய ஞானமார்க்கத்திலே இந்த இரண்டு முறைகளுமில்லை. பருப்பொ

ருள்தான் பருப்பொருளுக்குக் காரண காரியத் தொடர்பை நிறுத்துகிறது என்பது முடிபல்ல. பருப்பொருள்களை நுண்பொருள்கள் இயக்க வல்லன. காண்பனவற்றைக் காணவொண்ணுதன பிறழச் செய்யவல்லன. மேலும் சொல்கிறேன். படிப்படியாக உனக்குத் தெரிவிக்க வேண்டும். ஏனென்ருல் உன் அறிவு இதுகாறும் பருப்பொருள் நிச்சயத்திலேயே அழுந்திக் கிடக்கிறது. அதைக்கடந்து உன் சிந்தனை செல்லச் சற்றுப் பிடிக்கும். பருப்பொருள், நுண்பொருள் என்ற பாகுபாடே உண்மையில் இல்லை. உன்னுடைய விஞ்ஞானமே இதை இன்று சொல்ல முன்வந்துவிட்டது. பத்தொன்பதாம் நூற்ருண்டு விஞ்ஞானத்தைத் தாண்டிய வரைகை இருந்தால் இது உனக்கு நன்ருக விளங்கும். சிறப்பாக பிஸிக்ஸ் என்று சொல்லப்படும் பௌதிக நூலில் துறை போகிய ஸர் ஜேம்ஸ் ஜீன், ஸர் ஆர்தர் எடிங்டன், ஆல்பர்ட் எயின்ஸ்டீன், மார்க்ஸ் பிளாங்க் முதலிய விஞ்ஞானிகளின் முடிபுகளை—முடிபுகளை என்றுகூட முற்றச்சொல்வதிற்கில்லை; முடியா முடிபுகளை—சிந்தனை செய்துபார். அவர்கள் எல்லோரும் பருப்பொருள் அமைப்பை ஆராய்ந்து, பகுத்துப் பகுத்து இறுதியில் அணுவை எட்டியிருக்கிருர்கள். இதுகூட மலையைக் கல்லி எலியைப் பிடித்தது போல்தான். இந்த முடிபெல்லாம் முன்னேயே திருமூலர் போன்றவர்கள் ஞானமார்க்க ஆராய்ச்சியால் கண்டு பிடித்து வைத்தவைதாம். ஆயினும் நீ விஞ்ஞானி. உனக்கு விஞ்ஞானி சொன்னல் தான் ஏற்கும்; ஏனென்ருல் அவர்கள்

காட்சிப் பிரமாணத்தால் உனக்குச் சான்று தருவதாக நினைக்கிறாய்.

"இருக்கட்டும். கடைசியில் அவர்கள் என்ன சொல்கிறார்கள் தெரியுமா! எல்லாப் பொருள்களும் இந்த அணுக்களாலானவையே. அணுக்கள் வெவ்வேறு வகையாக அமைந்து திரண்டு நிற்கையில், வெவ்வேறு தோற்றமளிக்கின்றன. இறுக்கப் பொருளாய் அமையும்போது அணுக்கூட்டத்தின் திரட்சி ஒருவகை. ஒழுக்குப் பொருளாய் வருகையில் மற்றொரு திரட்சி; ஆவியாய் இயங்குகையில் இன்னுமொரு கூட்டுப் பொருள். அனைத்தும் இறுதியில் அணுவே. அவ்வாறிருந்தும், வெவ்வேறு பொருள்களாய் அமைவது எவ்வாறென்றால், அது தான் மனத்தின் செயல். மனம் வேறாகிய தோற்றத்தை அளிக்கிறது. மனமில்லாது போனால் தோற்றங்களுமில்லை; பொருள்களுமில்லை. இதை அவர்கள் ஐடீயலிசம் என்று சொல்கிறார்கள். அகராதியைப் பார்த்தால் உன் தமிழ் மொழியில் பாவப் பிராதான்ய வாதம் என்றிருக்கும். வாய் நிறைந்த சொற்றொடர்; அதைவிட ஐடீயலிசம் என்றே வைத்துக்கொள். அல்லது பாவனை என்று சுருக்கமாக நினைவில் வைத்துக்கொள். அதாவது மனம் எப்படிப் பாவனை செய்கிறதோ, அதன் வடிவாகவே பொருள்களின் தோற்றமும் அமைகின்றன."

"வசந்த தேவ, சற்று நிறுத்து; எனக்குத் தலை வலிக்கிறது. மயக்கம்கூட வருகிறது. இதென்ன பழைய நம் பக்தர்கள் பாடினதைத்தான் இந்த

விஞ்ஞானிகள் இன்று பாடம் சொல்கிறார்களா? மனக்குரங்கு, மனப்பேய், மாயை என்றெல்லாம் தத்துவ ஞானிகள் சொல்வதைத் திருப்பிச் சொல்லத்தானா இவர்கள் இப்பாடுபட்டார்கள்? ஆனால் ஒன்று, ஐயனே, மனத்தின் பாவனைதான் எல்லாப் பொருள்களும் என்பது முடிந்த முடிபாயினும், அணு என்று ஒரு ஆதிப் பொருள் இருக்கின்றதே அதற்கு ஒரு வடிவம், கனம், நிறம் முதலியன இருக்கவேண்டுமே. அப்படியானால் பொருளெல்லாம் பருப்பொருள் மயம் என்று விஞ்ஞானிகள் கூறுவதை மறுக்கவில்லையே?

“தம்பீ, இந்த நிபுணர்கள் அந்த அணுவையும் தொளைத்துக்கொண்டே இருக்கிறார்கள். ஆனால் அதன் மெய்யுருவைப்பற்றி எவ்வித ஒத்தமுடிபுக்கும் வரவில்லை; முடிந்ததெல்லாம் அணுவைப் பிளந்து அழிவு செய்யும் குண்டுமாரிகளை உண்டாக்கத்தான். அந்த அணுவின் தன்மையைப் பற்றிய முடிபுகளை ஐந்தாண்டுக்கொருமுறை மாற்றிக் கொண்டே வருகிறார்கள். லார்டு ருதர்போர்டு என்ற ஆங்கிலேய விஞ்ஞானி அண்ட அமைப்பில் நடுவே கதிரோனும், பாங்கிலே சந்திரன், பூமி, கோள்கள் வலம் வருவதுபோல, அணுவும் அதைச் சுற்றிச் சிற்றணுக்களும் நீங்காது நடனம் செய்து கொண்டிருக்கின்றன என்றார். இந்தச் சித்திரம் இப்பொழுது கைவிடப்பட்டு, அணுக்கள் அலைவடிவமாயிருக்கின்றன என்கிறார் ஒரு சாரார்; சக்தி வேகமாயிருக்கிறது என்கிறார் மற்றொரு சாரார்.

எப்படியாயினும், அணு என்பது பருப்பொருளென்றே ஏற்பட்டு விடினும், அணுவுக்கும் அணுவாய் அப்பாலுக்கு அப்பாலாய் இருப்பது நுட்பப் பொருளே. அதைக்கண்ணால் காணமுடியாது; துலாக் கோலால் நிறுக்க முடியாது. ஆகவே பருப்பொருள் வேறு. நுண்பொருள் வேறு. பருப்பொருள்தான் பருப்பொருள் மாட்டுக் காரண காரியத்தொடர்பை நிகழ்த்தும் - என்பது உன் விஞ்ஞானப்படியே தவறப்பா.

"இன்னுமொன்று தேவனே! இந்தநுட்பங்களை இன்றைய விஞ்ஞானிகள் விஞ்ஞான அறையில் கருவிகள் கொண்டு காட்சிப் பிரமாணத்தால் ஆராய்ந்து கண்டார்கள். எளிதில் ஒப்பமுடிவதாயிருக்கின்றன. ஆனால் பண்டைய மெஞ்ஞானிகள் என்ன ஆராய்ச்சி முறையை மேற்கொண்டார்கள்?

"மகனே! சுருதி, யுக்தி, அநுபவம் என மூன்றும் அன்றும், இன்றும் எல்லா ஆராய்ச்சிக்கும் துணையாயமைந்த முறைகள். முன்னோர்சொன்னது சுருதி. நம் சிந்தனையைத் தேக்குவது யுக்தி. இவ்விரண்டிலும் சிறந்தது அநுபவம். அநுபவத்திலிருந்துதான் சுருதியும், யுக்தியும் முதலில் தோன்றின. ஆனால் இந்த அநுபவம் இருவகைப்படும். உங்கள் விஞ்ஞானிகள்பெறும் அநுபவம் காட்சிச் சான்றாய் புறக்கருவித்துணையாய் வருவது. இதுநேர்முக அநுபவமல்ல. நேராக வரும் அநுபவம் வேறுண்டு.

அதுதான் சமய அனுபவம்; ஆன்ம அனுபவம். ஐந்தவித்து, மனத்தை ஒருமைப்படுத்தி, சிந்தனையைத் தேக்கையிலே, பல்லாண்டு கருவித்துணையாலும், காட்சிச் சான்ருகவும் பெற்றவை, சில்லாண்டுகளில் கைவரப் பெறுகின்றன. மீதூறிய, கரை கடந்த அன்பின் பெருக்காலும் மனம் பண்பட்டு இந்த அனுபவம் பிறக்கின்றது. விஞ்ஞான முறையில் வரும் அனுபவம் காட்சியால், கருவியால் அளவிடலாகும். குணமில்லா, குறியில்லாப் பண்புகளை அவைகள் எட்டவல்லனவல்ல. வாள்கொண்டு மரத்தை வெட்டலாம்: மயிரை, நீரை, காற்றைக் கிழிக்கமுடியுமோ? அதற்கு வேறு நுட்பக்கருவிகள் வேண்டும். அழகு என்ற பண்பை விஞ்ஞானம் அளக்கவல்லதா? அது இவ்வண்ணத்தது, இவ்வளவு அகன்றது, உயர்ந்தது, நீண்டது என்று விஞ்ஞானம் அறுதியிடவல்லதா? இதனுலேயே மேநாடு, கலைவேறு, விஞ்ஞானம் வேறு என்று பாகுபாடு செய்து கொண்டது. இரண்டும் மனத்தால் அளக்க வல்லன என்று கண்ட உன் முன்னோர் அனைத்தும் கலைஞான மென்றே பாகுபாடின்றிக் கூறினர்.

"மிகக் குறுக்கு வழியாக இருக்கிறதே. அதிகச் செலவில்லை. சீமைக்குச் சென்று கற்றுத்தேற வேண்டியதில்லை. பல்லாண்டு, விஞ்ஞான அறையில் செல்லாக்க வேண்டியதில்லை. இந்தவழியை, என் இறைவ, சற்று எனக்கு இன்னும் விளக்கலாகாதா?"

" அப்பனே, நீ நினைப்பது போன்று அது அவ்வளவு குறுக்குவழியல்ல. எத்தனையோ பேராபத்துக்கள் நிறைந்தது. கரடுமுரடானதும் கூட. ஆறலைக்கும் வேடர், கொன்றழிக்கும் வனவிலங்குகள், ஒன்றாய் விழுங்கும் முதலைகள் நிரப்பியது. மிக மன உறுதியுள்ளோர்க்கன்றி பயணம் முற்றாது. அதை இன்னொரு முறை உனக்கு எடுத்துச் சொல்லுகிறேன். இன்னும் உனக்குப் பக்குவம் போதாது.

" திருமூலர் என்பவர் எழுதிய திருமந்திரம் என்னும் நூலை நன்றாகப் படி. பிறகு மனித உள்ளத்தே எழும் கருணைக்கும், இறைவன் திருக்கருணையாகிய மழைக்கும் இருக்கும் நெருங்கிய இணைப்பு, காரண காரியத்தொடர்பு நன்கு புலனாகும்."

விழித்தெழுந்தேன். வசந்தனின் அன்புப் பரிசாய் காயும் கனியும் குவிய, கண்ணாடி முன்னே திருவிளக்குச் சுடர் விட்டெரிந்து கொண்டிருந்தது. திருப்பனந்தாள் ஆதீனகர்த்தர் காசிவாசி அருள் நந்தித்தம்பிரான் அன்போடு அனுப்பிவைத்த திருமந்திர நூல் விளக்கடியில் விளக்கம் செய்தது. நூலைத் திறந்தேன். பின்வரும் பாட்டு புத்தாண்டுப் புதுநாளில் முதன் முதல் முகக்கண்ணில் பட்டது; மெல்ல அகக் கண்ணையும் ஊடுருவியது.

> வரையிடை நின்றிழி வான்நீர் அருவி
> உரையிடை உள்ளத் தகத்து நின் றூறும்
> நுரையில்லை, மாசில்லை நுண்ணிய தெண்ணீர்க்
> கரையில்லை எந்தை கழுமணியாறே.

---

# ஞானமும் விஞ்ஞானமும்

விஞ்ஞானம் நம்மை "அஞ்ஞனாத்து"க்கு இழுத்துச்செல்வது போலிருக்கிறது."பகுத்தறிவுக்"காலம் பழைய "பௌராணிக" காலத்துக்குக் கொண்டு போவது போலிருக்கிறது. தூலம் சூக்குமத்துக்குத் திரும்புவதாயிருக்கிறது. பருப்பொருள் நுண்பொருளோடு இரண்டற இயைவதாயிருக்கின்றது. "முற்போக்கு" "பிற்போக்கை" வளைந்து தழுவுவதாயிருக்கின்றது. மேலைநாடு கீழ்நாடு நோக்கிப்பயணம் செய்வதுபோல் தோன்றுகிறது. இருபதாம் நூற்றுண்டின் காரியவாதம் இதிகாச நூற்றுண்டின் கற்பனையில் கலப்பதுபோன்ற காட்சி தருகின்றது. உலோகாயதத்துக்கும் ஆத்மீகத்துக்கும் உறவு ஏற்படுவது போலிருக்கிறது.

புள்ளினம் போல் சிறகு விரித்து மனிதன் பறந்தான் என்றபோது பகுத்தறிவு எள்ளிச்சிரித்தது; பழைய கட்டுக்கதை என்றது. இருபதாம் நூற்றுண்டில் ஆகாய விமானம் மெய்யாகியது. மீனினம் போல் நீரில் மூழ்கினன் என்றபோது, பகுத்தறிவு அலட்சியம் செய்தது. சப்மரைன்கள் என்ற வகை வகையான நீர்மூழ்கிக் கப்பல்கள் வர, பகுத்தறிவே கண்டு வியந்தது. நிழற்படம் பேசுமா என்று பத்

தொன்பதாம் நூற்றாண்டுப் பகுத்தறிவு வாதியைக் கேட்டால் நம்மை பைத்திய மென்றிருப்பான். வான வீதி வழியாய் பல்லாயிரம் மைல்களுக்கப் பால் ஒலிபரக்க ரேடியோ வந்தது, பல நூறு மைல் களுக்கப்பால் ஒளிபரக்க டெலிவிஷன் வந்தது என்றால் நமது பகுத்தறிவுவாதி வழக்கமாய் வந்த பகுத்தறிவு வாதியாக இருந்தால் நம்பியே இருக்க மாட்டான். ஏனெனில் பகுத்தறிவு வாதி ஐம்புலன் கள் சாட்சியமே அறுதியான, உறுதியான சாட்சி யமாகக் கருதுகிறவன். ஐம்புலனுக்கெட்டாத சூட் சும சக்தியில் அவன் பகுத்தறிவு அவனை நம்பச் செய்யமுடியாது. கண், காணமட்டும்தானே பார்க்க முடியும்; காது, கேட்கமட்டுந்தானே கேட்க முடியும் என்று அவன் பகுத்தறிவு வாதமிடுகையில், ரேடியோ வரப்போகின்றது என்று சொன்னால் வருமுன் அவன் அவற்றை நம்ப முறையில்லை.

உலகம் பரந்து தட்டையாக இருக்கிறது. கதி ரோன் நாளும் கீழ்த்திசை எழுந்து மேல் திசையில் மறைகிறான். இரவெல்லாம் பூமி நடுவில் எங்கோ எவருக்கும் தெரியாமல் ஒளிமறைய ஒளிந்து மறைந்து பயணம் செய்து மறுபடியும் கீழ்த்திசை யில் பன்னிரண்டு மணி நேரம் சென்றதும் தோன் றுகிறான். இதைத்தான் என் பகுத்தறிவு நம்பச் செய்தது. அவன் ஒற்றைச்சக்கரம் கொண்ட இர தத்தில் பச்சைப் பட்டு போர்த்திய ஏழு குதிரைகள் பூட்டி, அருணனென்பவன் சாரத்தியம் செய்ய தின மும் வான வீதியில் பவனி வருகின்றான்; பின்னே ஏழுகடலுள் இரவெல்லாம் ஆழ்ந்து துயில்கின்றான்.

என்பனவற்றை எல்லாம் என் பகுத்தறிவு தயங்காமல் மறுத்தது. நக்கீரர் திருமுருகாற்றுப் படையில் "உலகமுவப்ப வலனேர்பு திரிதரு பலர்புகழ் ஞாயிறு" என்ற வருணனை கூட மெய்யென்று கொள்ளாது, கவியின் கற்பனைப் பெருக்கென்றே என் அறிவு கூறியது. ஆயினும் இளமையில் ஆசிரியர்கள் உலகம் உருண்டை என்றே சொல்லிக் கொடுக்கத் தொடங்கினர்கள். அது கண்ணால் நான் கண்டதற்கு நேர் முரணான பாடமாகவே பட்டது. அதற்கு அவர்கள் கூறிய காரணங்களுள் ஒன்றாயினும் காட்சி சாட்சியமான காரணமாக, அறிவு ஒப்பும் முறையில் அமையவில்லை. எறும்பொன்று ஒரு எலுமிச்சம் பழத்தின்மீது ஓரிடத்திலிருந்து புறப்பட்டால் மீண்டும் அதே இடத்துக்கு வந்து சேரும்; ஆகவே உலகம் உருண்டை என்பது ஒரு எடுத்துக் காட்டு. இப்படி என்றுமே ஒரு எறும்பு, பயணம் செய்வதை நான் பார்த்ததில்லை. ஆசிரியர்களும் வகுப்பில் அந்தப் பயணத்தைக் காண்பிப்பதில்லை. மற்றொரு சாட்சியம்: கடலோரத்தில் நின்று ஒரு மனிதன் தொலைவில் வரும் ஒரு கப்பலை உற்று நோக்கிக்கொண்டே இருப்பானாகில் முதலில் அதன் கொடி தோன்றும், பின்னே பாய்மரம் தோன்றும், அடுத்து மேல் தட்டுத் தோன்றும், இறுதியில் கீழ்த் தட்டுத் தோன்றும்; எனவே பூமி உருண்டையாயிருக்கிறது. இது எப்படி ஒரு சாட்சியமாகும்? கண்ணின் இயல்பான பார்வையினால் இவ்வாறெல்லாம் தோன்றுகின்றன என்று கொள்வதல்லவோ பகுத்தறிவு?

ஒரு கத்தரிக்காயையோ மாம்பழத்தையோ சுட்டெடுத்தால் மேடு பள்ளங்களாக இருப்பதுபோல் பூமியின் மேற்பாகமும் இருக்கிறது என்பது மற்றொரு பிள்ளைப் படிப்பினை. ஏன் வேகவைத்த முட்டைத்தோடுபோல் அப்படியே இருக்கலாகாது என்று பகுத்தறிவுகேட்க நினைத்தது.

நமது பழைய நூல்களிலே சித்திகளைப் பற்றியும், சித்தர்களைப் பற்றியும் எவ்வளவோ சொல்லியிருக்கிறார்கள். அணிமா, மகிமா, கரிமா, இலகிமா, பிராப்தி, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம் என்ற எண்வகைச் சித்திகளை உடலையும், மனத்தையும், ஒழுங்குபெறச்செய்தால் பெறலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அணிமா என்றால் அணுவைப்போன்ற சிறிய உருவம் எடுப்பது. மகிமா என்றால் அண்டத்தையொத்த பேருருவம் பெறுவது. கரிமா என்றால் தன் உருவத்திற்கு இடம், பொருள், காலம், கனம்போன்ற எவ்விதக் கட்டுப்பாடுமில்லாது இடம், பொருள், காலம் கனம்பொருந்திய பிற உருவங்களோடு ஒன்றி நிற்பது. இலகிமா என்பது லேசாகி விடுவது. வேண்டுவனவற்றைப் பெறுவது பிராப்தி. எங்கும் நிறைந்து நிற்பது பிராகாமியம். எல்லாப் பொருள்களையும் ஆளவல்ல சித்து ஈசத்துவம். எவற்றையும் தன் வசமாக்கும் ஆற்றல் வசித்துவம். இந்த அட்டசித்திகளை அனுமன், திருமூலர், விக்ரமாதித்தன், சங்கரர் போன்றவர்கள் ஒவ்வோரளவுக்குக் கைவரப் பெற்றிருந்ததாகப் படித்திருக்கிறேன். பெரிதும் கைவரப்பெற்ற பதினெண்

தமிழ்ச் சித்தர்கள் வரலாறுகள் இருக்கின்றன. அட்ட சித்திகளைக் குருசீடப் பரம்பரையாகப் பயின்ற வித்தகச் சித்தர்கணம் அழியாது வருவதாயும் நூல்கள் கூறுகின்றன. தாயுமானவர் இந்த வேதாந்த சித்தாந்த சமரச நன்னிலை பெற்ற வித்தகச் சித்தர்கணத்தின் செயற்கருஞ் செயல்களை விரித்து அற்புத ஒரு திருப்பதிகமும் பாடியிருக்கிறார்.

திக்கொடு திகந்தமும் மனவேக மென்னவே
சென்றேடிடுயாடி வருவீர்
செம்பொன் மகமேருவொடு குணமேரு என்னவே
திகழ்துருவம் அளவளாவி
உக்ரமிகு சக்ரதரனென்ன நிற்பீர்கையில் உழுந்தமிரும்
ஆசனமா வோரேழு கடலையும் பருக வல்லீ
ரிந்த்ரன் உலகும் அயிராவதமுமே
கைக்கெளிய பந்தா எடுத்து விளையாடுவீர்
கனகவட்டத்தை யெல்லாங்
கடுகிடையிருத்தியே அட்டகுல வெற்றிபையுங்
காட்டுவீர் மேலும் மேலும்
மிக்க சித்திகளெல்லாம் வல்லநீர்..........................

இன்னும் இந்தத் தவராசர்கள், குணசாந்தர்கள், செய்யவல்ல சித்திகள் பற்பல. அண்டங்களெல்லாம் அழிவுறும் ஊழிக்காலத்தே மேலண்டப் பரவெளியில் மருவுவார்கள். கற்பாந்தப் பிரளய காலத்தே நீரிலுறை வண்டாய்த்துவண்டு சிவயோக நிலையில் நிற்பார்கள். உலகங்கள் கீழ்மேலாகப் பெருங்காற்று வருங்காலத்தே மேருவென அசை

யாது நிற்பார்கள். மும்மண்டலத்தும் கிள்ளாக்குச் செல்ல, கிரீடாதிபதிகளாய் வீற்றிருப்பார்கள். இந்திராதி தேவர்களெல்லாம் விசய சயசய என ஆசி சொல்லக் கொலு இருப்பார்கள். அவர்கள் பெருமையைச் சொல்வது எளிதோ என்று தயங்குகிறார் தாயுமானவர்.

இந்த அட்டமா சித்திகளை இறைவனே ஒரு முறை இயக்கமாதர்க்கு எடுத்துச்சொல்லியதாகத் திருவிளையாடற்புராணம் சொல்லும். திருவாசகத்துள்ளும்.

"பட்டமங்கையிற் பாங்காயிருந்தங்
கட்டமாசித்தி யருளிய வதுவும்"

என்று முன்னே குறிப்பிட்டிருக்கிறது. ஆனால் மெய்யான சிவஞானச் செல்வம் கைவரப்பெற்றோர், கைவருங் கருத்துடையோர் இச்சித்திகளெல்லாம் செப்பிடு வித்தைக்காரன் செயல்களென எள்ளி ஒதுக்குவர். பட்டினத்தடிகளும்

" இந்திரச் செல்வமுமெட்டுச் சித்தியும்
வந்துழி வந்துழி மறுத்தனரொதுங்கி"

என்று இவற்றைக் கண்டித்திருக்கிறார். ஆயினும் நம்பிக்கையில்லாத உலகத்துக்கு, அருமையாக ஒவ்வொரு பொழுதில் அடியார்கள் பெருமையை எடுத்துக்காட்டுவதற்கு இச்சித்திகள் வாக்காய் அமைகின்றன என்று சோமசுந்தரக் கடவுளே பரஞ்சோதி முனிவர் வாயிலாக ஒப்புக்கொண்டிருக்கிறார்:

எம்மையுணர்ந்த யோகியர்கள் இவற்றை விரும்பாரெனினுமவர்
தம்மை நிழல்போலடைந்துலகர்க்கு அனையார் பெருமைதனை
யுணர்த்தும்
செம்மையுடைய இவையென்னச் சித்தியெட்டுந் தெளிவெய்த
.............................................................
அறுவருக்குங் கொளுத்தினு னெண்குணச்செல்வன்

—திருவிளையாடற் புராணம்.

இரமண முனிவரிடம் ஒருவர் இந்த அற்புதச் சித்திகளைத் தாங்கள் செய்யக்கூடுமோ என்று கேட்டார். அதற்கு இரமணர், இலக்கியத்துறையில் எம். ஏ. பட்டம்பெற்றவனிடம் போய் அரிச்சுவடி தெரியுமா என்று கேட்பதுபோலிருக்கிறதே என்று மறுமொழி கூறினர். ஆனல் உலகம் இந்த அற்புதங்களை வேண்டுகின்றது. அப்பொழுதுதான் நம்புவேன் என்கிறது. ஏசுநாதருக்குக்கூட இந்த நெருக்கடியான நிலைமை ஏற்பட்டது. எத்தனையோ சித்துக்கள் செய்துகாட்டினர். ஆயினும் மக்கள் மேலும் மேலும் புதுச்சித்துக்கள் வேண்டி நின்றார். கடைசியில் ஒருமுறை மிக மனக்கசப்போடு 'இது நம்பிக்கையற்ற தலைமுறை; ஒரு குறியை நாடுகிறது' என்று சொல்லியிருக்கிறார்.

இராமகிருஷ்ண முனிவரும் சித்துக்கள் செய்வதால் மனிதன் அகங்காரம் அல்லது தானெனும் நினைப்பு முனைப்படைந்து இறைவனோடு இரண்டறக் கலக்கவேண்டுமென்ற மனஉறுதி குறைகின்றது என்று வற்புறுத்தியிருக்கிறார்.

"மெய்யான பக்தன் இறைவனிடமிருந்து எதையும் விரும்புவதில்லை. கலவாத அன்பு இன்பப்பெருக்கையே கோருகிறான். அற்புதச் சக்திகளையும் சித்துகளையும் நினைப்பதில்லை.

சித்திகள் கைவரப்பெறுவது ஆன்ம இன்பம் முற்றுமடையப்பெரியதொரு இடையூறாகும். நாங்தா இதை ஒரு கதையால் விளக்கினார். ஒரு சித்தன் கடற்கரையில் ஒரு நாள் உட்கார்ந்து கொண்டிருந்தான். பெரும் புயலொன்று எழுந்தது அவனுக்குத் தொந்தரவாக இருந்தது. உடனே 'அந்தப் புயல் அடங்குக' என்று ஆணையிட்டான். ஆணை நிறைவேறியது. புயலை எதிர்த்துப் பாய்விட்டு, முழுவலியோடு ஒரு கப்பல் சென்றுகொண்டிருந்தது. திடீரெனக் காற்று அடங்கிவிடவே கப்பல் கவிழ்ந்து மூழ்கியது. பிரயாணிகள் அனைவரும் இறந்தனர். அவர்களைக் கொன்ற பாவத்துக்குச் சித்தன் ஆளாயினான். ஆகவே அவன் அற்புதச் சித்து சக்திகளும் குறைந்தன. நரகத்துக்குச் சென்றான்.

"ஒருதுறவி அரியசித்திகளை அடையப்பெற்றார். அவற்றைப் பற்றி அளவற்ற பெருமை கொண்டிருந்தார். ஆயினும் அடிப்படையில் நல்லவர்தான். தவங்கள் செய்தவர். ஒரு நாள் இறைவன் ஞானி வடிவாய் அவரிடம் வந்து 'பெரியவரே. தாங்கள் அற்புதச் சித்திகள் செய்ய வல்லவர் என்று கேள்வியுற்றேன்' என்றான். சித்தர் அவரை வரவேற்று உபசரித்தார். அப்பொழுது ஒரு யானை

அவ்வழிச் சென்றுகொண்டிருந்தது. ஞானி வடிவாய் வந்த இறைவன் ‘இந்த யானையைத் தங்களால் கொல்லமுடியுமோ’ என்றான். ‘ஆம். செய்யலாம்’ என்று சொல்லி ஒரு துளி மண்ணை எடுத்து, சில மந்திரங்களை முணுமுணுத்து யானையின் மேல் சித்தர் தூவினார். யானை மரண வேதனையில் ஒரு கணம் உழன்று, மண்ணில் சாய்ந்தது. ‘ஆகா, தங்களுக்கு எவ்வளவு ஆற்றல் இருக்கிறது; யானையைக் கொன்றுவிட்டீர்களே’ என்று வந்தவர் வியந்தார். சித்தர் பூரித்தார். மாறு வேடத்தில் வந்தவர் மீண்டும் சொல்வார்: ‘அந்த யானையை எழுப்ப முடியுமா?’ ‘ஆம், செய்யலாம்’ என்றார் சித்தர். மற்றொரு துளி மண்ணை எடுத்துப்போட, யானை உறக்கத்திலிருந்து விழித்தெழுவதுபோல உயிர் பெற்றெழுந்தது. துறவியாய்வந்த இறைவன் சொல்வான்: ‘ஆகா, என்ன அரிய அற்புத சக்தி! ஆனால் நான் ஒன்று கேட்கலாமோ? தாங்கள் அந்த யானையைக் கொன்றீர்கள். பின் எழுப்பினீர்கள். அது தங்களுக்கு என்ன செய்தது? அதனால்தாங்கள் உயர்ந்து விட்டதாகக் கருதுகிறீர்களா? கடவுளடியை அடைவதற்குத் தங்கள் அற்புதச் செயல் ஒரு அடியாவது தங்களை முன்னேற்றியதா?” என்று சொல்லி மறைந்தான்.

வழிவழிவந்த இந்த வித்தகச் சித்தர் பரம்பரையில் கடைசியாகத் தோன்றியவர் வள்ளலார் இராமலிங்க அடிகள். அவர் செய்த பல அதிசயங்களுள்ளே தன் அங்கங்கள் வேறுனதொன்று. “ஒரு

நாள் இரவு வெளியே போன ஐயா அவர்கள் அதிக நேரமாகியும் திரும்பி வரவில்லையே யென்று வேலூர் சண்முகம்பிள்ளை என்பார் சாலையைவிட்டு வெளியே போய்ப்பார்க்க அங்கே ஐயா அவர்களுடைய அங்கங்களெல்லாம் தனித்தனியாகக் கிடந்தன. அதைக்கண்ட அப்பிள்ளை உடல் நடுங்க, உயிர் நடுங்க 'அந்தோ அடிகள் இவ்வாறு ஆயினரே, இனி என்செய்வோம்' என்றின்ன பலமொழிந்து வருந்துகின்ற வேளையில், ஐயா அவர்கள் திடீரென அவருடைய கண்முன்னே தோன்றி நீர் இனி இம்மாதிரி வந்து பார்க்காதீர் என்று எச்சரித்தனர். அவரும் மகிழ்வோடு ஐயா அவர்களுடைய ஆணையைச்சிரமேற்கொண்டு பின் தொடர்ந்து வர இருவரும் சத்தியத் தருமச்சாலையை அடைந்தனர்."

முழுப் பொய்: பகுத்தறிவுக்கு முற்றிலும் முரண்; உலகத்தை ஏமாற்றும் கதை; தொண்டர்கள் கண்ட பிழைக்கும் வழி எனக்கருதலாம் சிலர்.

ஆனல் பத்திரிகையில் ஒரு செய்தி வந்திருக்கிறது. பிரிட்டனில் ஒருவனைக் கை வேறு கால் வேருய்த் துண்டித்து அமெரிக்காவில் மறுபடியும் முழுதாய் (உயிரோடு)க் கூட்டிவிடும் விஞ்ஞான முறை அண்மையில் வந்துவிடும் என்று ஒரு பிரபல விஞ்ஞானி சொல்லியிருக்கிருர். இந்துப் பத்திரிகையில் இது பற்றி ஒரு தலையங்கமும் வந்தது.

அருட்பாவை மருட்பா என்றவனுக்குப் பத்திரிகைச் செய்தி என்றதும் நம்பிக்கை பிறந்துவிட்டது. பகுத்தறிவின்வேகம்! பழைய மூடநம்பிக்கை பறந்து புது மூட நம்பிக்கை புகுகின்றது. வேதத்தை நம்பாதவன் தினசரிப் பத்திரிகையைத் தயக்கமின்றி நம்புகிறான். சித்தை நம்பாதவன் விஞ்ஞானத்தை நம்புகிறான். உள்ளத்தின் ஆற்றலை நம்பாதவன் உடலின் ஆற்றலை நம்புகிறான்.

இன்னும் இம்மாதிரியாக விஞ்ஞானம் செய்ய வல்ல செய்திகள் ஒன்றிரண்டு உலகப் பத்திரிகைகளிலெல்லாம் அண்மையில் வெளிவந்துள்ளன. எவ்வித வாயிலுமே இல்லாத ஒரு கோட்டைச் சுவரை ஊடுருவிச் சென்றுவிடலாம்; ஒரே காலத்தில் பல இடங்களில் உலவலாம்; சென்ற பல ஆண்டுகள் முன் ஒருவன் சிந்தனை செய்தவற்றையெல்லாம் புகைப்படம் பிடித்துவிடலாம். இவைகளெல்லாம் வெயில் மழை என்றில்லாது, பசி பட்டினி என்று பாராது, உடலை வருத்தி மனத்தை ஒருமைப்படுத்திப் பெறும் யோகசித்திகளாலல்ல. விஞ்ஞான சக்தியால்; பருப்பொருள் கருவிகள் துணையால்.

பௌதிக சாஸ்திரத்திலே ஜூல்ஸ் என்பவர் கண்ட ஒரு விதி உண்டு. அதாவது உலகத்திலுள்ள எவ்வகையான சக்தியும் கூடுதல் குறைவின்றி மொத்தத்தில் ஒரே அளவாயிருக்கிறதாம்.

எதையுமே இயற்கையில் இழப்பதென்பது கிடையாது. ஒரு மெழுகுவத்தி எரிந்தபோது, மெழுகோ அது அடக்கிவைத்திருந்த எண்ணெய்க் கொழுப்போ குறைந்து படினும், வேறு வாயு ரூபமாக அது மாறி வானவெளியில் இருப்பதேயல்லாது மொத்தத்தில் முன்னிருந்த சக்தி இருந்தவாறே அழியாதிருக்கின்றது. உருவமாற்றமே நிகழ்கிறது. இதைப்போலவே இன்னொருவிதி இருப்பதாகப் பெர்னட்ஷா சொல்லியிருக்கிறார். அதாவது மனித நம்பிக்கையின் அழியாத்தன்மை. ஒரு நம்பிக்கை போய் இன்னொரு நம்பிக்கையாய் உருமாற்றம் அடைகிறதே தவிர மொத்தத்தில் நம்பிக்கை குறைவுபடாமல் படைப்புக்காலத்தில் இருந்தபடியே இருக்கிறது. மந்திரவாத நம்பிக்கைகள் போய் விஞ்ஞான நம்பிக்கைகள் வருகின்றன. கண்ணாற் கண்டதும் பொய்; காதாற் கேட்டதும் பொய் என்றால் எது மெய், எது பொய்?

**இயல்வே தாகமங்கள் புராணங்களிதிகாசம்**
**இவை முதலா இந்திர சாலங்கடையா உரைப்பார்**
**மயலொரு நூல் மாத்திரந்தான் சாலமென அறிந்தார்**
**மகனே நீ நூலனைத்துஞ் சாலமென அறிக.**
**செயலனைத்தும் அருளொளியாற் காண்கவென எனக்கே**
**திருவுளம் பற்றிய ஞான தேசிகமா மணியே**
**அயலறியா அறிவுடையார் எல்லாரும் போற்ற**
**ஆடுகின்ற அரசே யென அலங்கலணிந்தருளே.**

அருளொளியால் தான் காணமுடியுமா? விஞ்ஞான வழியால் முடியாதா? அவ்வளவு எளிதாய் நம்பிக்கையை இழக்க, தோல்வி என்று ஒப்புக்கொள்ள மனம் இசையவில்லையே.

# பிரார்த்தனை

சிறு காரியங்களுக்காக, சொந்த நன்மை தீமைகளுக்காக, இறைவனைத் தொழுவது முறையா? கடவுளுக்கு இதையெல்லாம் கவனிக்கநேரமுண்டா? அல்லது நமக்கு வேண்டியது எது, வேண்டாதது எது என்பது அவருக்குத் தெரியாததா?

வேண்டத் தக்கதறிவோய் நீ
    வேண்டமுழுதுந்தருவோய் நீ
வேண்டும் அயன்மாற்கரியோய் நீ
    வேண்டி நீ யென்னைப் பணிகொண்டாய்
வேண்டி நீ யாதருள் செய்தாய்
    யானும் அதுவே வேண்டினல்லால்
வேண்டும் பரிசொன்றுண்டென்னில்
    அதுவும் உன்றன் விருப்பன்றே.

என்பதன்றே திருவாசகம் கண்ட ஆத்தும நிவேதனத்தத்துவம். இதுபெரிய அடிப்படையானதொரு பிரச்னை. வில்லியம் ஜேம்ஸ் என்ற பெரிய அமெரிக்கத் தத்துவ ஆசிரியர் "வேறுவேறான சமய அனுபவங்கள்" என்னும் நூலில் விரிவாக இதைச் சர்ச்சை செய்திருக்கிறார். பிரார்த்தனையில் இருவகை. ஒன்று பாரமார்த்திகப் பிரார்த்தனை; மற்றது விண்ணப்பப் பிரார்த்தனை. பாரமார்த்திகப் பிரார்த்தனையிலே பிரார்த்தனை செய்யும் பக்தர் எந்தவித நன்மையையும் இறைவனிடமிருந்து எதிர்பார்ப்பதில்லை. ஜீவாத்மாவுக்கும் பரமாத்மாவுக்கும் இடையே நடைபெறும்

ஒரு மௌன சம்பாஷணை என்றே அதைச்சொல்ல வேண்டும். அங்கே பதியோடு பசு அந்தரங்கமான ஒரு பிணைப்பை ஏற்படுத்திக்கொள்கிறது. இதிலே வாய்ச்சொற்களுக்கு என்ன பயனுமில்லை; முணு முணுப்பு மந்திரங்களையும், வேத பாராயணங்களை யும் கடந்து புறவுலகிலே, நம்மைச் சூழ்ந்து, கட் புலன் கதுவாது ஒரு தெய்வீக சக்தி நிறைந்திருக் கின்றது. இந்தச் சக்தியை எவ்வளவுக்கெவ்வளவு மிகுதியாக நம்முள்ளே இழுத்துக்கொள்கிறோமோ, நமதாக்கிக் கொள்கிறோமோ, அவ்வளவுக்கவ்வளவு நமது ஆன்ம பலன் வலுவடைகிறது. இங்ஙனமாக சூழ்ந்து நிற்கும் சூக்கும சக்தியைக் கவர்ந்துகொள் ளும் ஒருமுறை முதல்வகையான பிரார்த்தனை என்பது.

விண்ணப்பப் பிரார்த்தனை என்பது வேறு வகையானது. தெளிவான ஒன்றை வேண்டிச் செய்யப்படுவது. இறைவனுக்கு மனுப்போடுவது. சுந்தரர்போல "பொன்னும் மெய்ப்பொருளும் போக மும்" தா என்று கேட்பது; பரவைக்கு முழுமுதற் கடவுளைத் தூது போக்குவது. நாவுக்கரசர்போல் வயிற்றோடு குடக்கி முடக்கியிடும் குடல் நோய்போக வருந்தி வேண்டுவது. "என் உயிரை எடுத்துக் கொண்டு என்மகனுயிரை வைத்துப்போம்" என்று பாபர் உமாயூன் படுக்கை யறையை ஏழு தரம் வலம் வந்து வேண்டிப் பெற்றது போல்வது, காரைக்காலம்மையாரைப் போல் புது மாங்கனி கேட்பதும், திருநாளைப்போவாரைப்போல, இறை

வனைப் பயிர் செய்யச் சொல்வதும், திருப்பதியில் மொட்டையிடுவதும், பிள்ளையாருக்குத் தேங்காய் உடைப்பதும், கேசு ஜெயித்தால் பூஜை போடு வேனென்று ஒப்பந்தம் செய்துகொள்வதும், தேர்த லில் வென்றால் திருவிழாச் செய்வேனென்று ஆசை காட்டுவதும், மந்திரியானல் மகாபிஷேகம் செய்வே னென்று வாக்களிப்பதும் எல்லாம் இந்த விண் ணப்பப் பிரார்த்தனையிலேயே அடங்கும்.

இந்த இடத்தில் அண்மையில் ஒரு ஆங்கில நூலிற் படித்த கதையொன்றைச் சொல்ல விரும்பு கிறேன். பாரிஸ் நகரிலே பதின்மூன்ரும் நூற்ருண் டிலே கொட்ருடு நாச்சியார் என்ற ஒரு கிருஸ்துவ மீராபாய் இருந்தாள். அம்மையாருக்குத் தலைவலி கடுமையாக வந்து கொண்டிருந்தது. வாசனை கொண்ட ஒரு மருந்தை வாயில் அடக்கிக்கொண்டு, ஏசுநாதரை நெடுநேரம் வேண்டினள். தேவபுத் திரன் தோன்றி அம்மையை அன்போடு அணைத்து அவள் வாயிலிருந்து எழுந்த நறுமணத்தைச் சிறிது நேரம் தானும் நுகர்ந்துவிட்டு, தன் மற்றைய அடி யார்களிடம் சென்று "என் காதலி இன்று தந்த புது வெகுமதியைக் கண்டீர்களோ" என்று திரு வாய் மலர்ந்தருளினராம். யாரே பிரார்த்தனை யின் பெருமையை அளவிடற்பாலார்?

இங்கிலாந்தில் ஜார்ஜ் முல்லர் என்ற ஒரு பாதிரியார் இருந்தார். பரமஏழை. ஆயினும் பைபிளைப் பரப்பும் பணியில் பெரு வெற்றியை அடைந்தார். இருபது லட்சம் பிரதிகளுக்கு மேல்

பல பாஷைகளிலும் வெளியிட்டு விநியோகம் செய்தார். நூற்றுக்கணக்கான போதகர்களுக்கு வேண்டியவெல்லாம் கொடுத்து வெவ்வேறு இடங்களுக்கு அனுப்பி வைத்தார். பதினெரு கோடி பத்து லட்சம் சமய நூற்களை வெளியிட்டு வழங்கினர். ஐந்து அனாதைக்குழந்தை இல்லங்கள் கட்டுவித்தார். ஆயிரக்கணக்கான அனாதை மாணவர்களுக்கு உணவு, உடை, உறையுள் யாவும் தந்து கல்வி புகட்டுவித்தார். இலட்சத்து இருபதினாயிரம் மாணவர்களுக்கு மேல் பயின்ற பல பள்ளிகளை நிறுவி வைத்தார். இந்தப் பணியிலே பதினைந்து லட்சம் பவுன் திரட்டிச் செலவு செய்துள்ளார். இரண்டு லட்சம் மைல்களுக்கு மேல் நிலத்திலும் நீரிலும் பிரயாணம் செய்துள்ளார். அவரது அறுபத்தெட்டு ஆண்டையப்பணியில் உடுத்த உடையும், எழுதிய மேஜை நாற்காலியும் தவிர எவ்விதச் சொத்தும் தனக்கென இருந்ததில்லை. இறந்த எண்பத்தாருவது வயதில் அவர் வைத்துப்போன சொத்தெல்லாம் நூற்றிஅறுபது பவுன் தான்.

இவை அனைத்தையும் அவர் செய்து முடித்தது ஒரே ஒரு வழியாலேயே—விண்ணப்பப் பிரார்த்தனை. "என் பெட்டிச் சாவி தொலைந்து போய் விட்டால் கடவுளே அது எங்கிருக்கிறதென்று காட்டும் என்று வேண்டுவேன். நான் காத்திருந்த ஒருவர் குறித்தபடி வரத்தவறிவிட்டால் அவரை என்னிடம் விரைவில் சேர்க்கும்படிக் கடவுளை மன்றாடுவேன்" என்று எழுதுகிறார். பிரார்த்தனை என்பது

தனக்கும் கர்த்தருக்கும் இடையே "குறியெதிர்ப்பை"யுடைய ஒருவியாபார ஒப்பந்தம்போலவே நினைத்து நடந்துவந்தார். அடுத்தவேளை சாப்பாட்டுக்கிருக்காது வணங்குவார்; வந்துவிடும்; அனாதை இல்லங்களுக்கு முதலிருக்காது தொழுவார்; எங்கிருந்தோ தோன்றிவிடும். நாட்டியக் கச்சேரிகளையும், நாடகக் காட்சிகளையும், விகடக்கூத்துக்களையும் நடத்திப் பொதுப்பணிக்குப் பொருள் சேர்க்க வேண்டுமென்று அவர் புத்தியில் படவேயில்லை. "அழுதால் உன்னைப் பெறலாம்" என்பதையே உறுதியாக வைத்து வெற்றி பெற்றார்.

மேலை நாடுகளிலே கிருஸ்துவ விஞ்ஞானம் என்ற ஒரு பெரிய இயக்கம் இருக்கின்றது. இதில் சேர்ந்தவர்கள் எத்தனைக் கடுமையான நோய் வந்த போதும், மருத்துவ உதவியை நாடுவதில்லை. இறைவனுக்கு மனுப்போட்டுவிடுவார்கள். நோய் குணமாகிவிடும், அல்லது இறைவனடியைச் சேர்ந்து விடுவார்கள். பூதத்துவ விஞ்ஞான நூற்பயிற்சி பெற்ற டாக்டர்களும் இதைவிட என்ன அதிகமாகச் செய்துவிடுகிறார்கள்? வைத்தியம் செய்கிறார்கள், ஊசிபோடுகிறார்கள், அறுக்கிறார்கள். ஒன்றும் முடியாவிட்டால் இறைவனிடம் விட்டு விடுகிறார்கள். கிறிஸ்துவ விஞ்ஞானிகளின் மருத்துவ முறையில் பணச்செலவு மிச்சம். இதுதான் வேற்றுமை.

UNIVERSITY EXTENSION
LIBRARY. MADURAI

புவானி அச்சகம், எழும்பூர் சென்னை-8.

783
O3L:6
UNIVERSITY LIBRARY
31 MAY 1957